॥ श्रीः ॥

॥ श्रीराधाकृष्णपरब्रह्मणे नमः ॥

3140

॥ नष्टजातकम् ॥

நஷ்டஜாதகம்

தமிழுரையுடன்

இச்சிறந்த உரை
மஹாமஹோபாத்யாய வேதாந்தகேஸரி
பங்காணாடு பிரும்மஸ்ரீ, கணபதி சாஸ்திரிகள்
அவர்களின் முக்கிய சிஷ்யரும் வியாகரண வேதாந்த
சாஸ்திர பாரங்கதரும், பாகவத, பகவத்கீதோபன்யாஸகரும்,
சோதிட மந்திர சாஸ்திர வித்வானும், 'ஆர்யமத ஸம்வர்த்தனீ'
பத்திராதிபருமான

பிரும்மஸ்ரீ, கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

அவர்களால் இயற்றி
பிரசுரஞ் செய்யப்பட்டது.

காபிரைட்] 1926 [விலை அ. 4

விளம்பரம்

கிரந்தலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடிய புத்தகங்கள்

ஸ்ரீ கிருஷ்ணகர்ணாமிருதம் — ஸ்ரீ கிருஷ்ண பக்தியைப்பு கட்டும் நூல் இதுவே.	1	8
சிவானந்த லஹரீ — ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளால் பரமசிவன் பேரில் செய்யப்பட்ட நூறு சுலோகங்கள்	1	4
ஸௌந்தர்யலஹரீ — ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளால் தேவீ விஷயமாய்ச் செய்யப்பட்ட நூறு சுலோகங்கள்.	1	12
சுந்தரகாண்டம்—பிரதிதினமும் பாராயணஞ் செய்வதற்கும், அர்த்தமறிந்துகொள்வதற்கும் சௌகரியமாயிருக்குமாறு இடது பக்கத்தில் சுலோகங்களும் வலது பக்கத்தில் கருத்துரைகளு மச்சிடப்பட்டிருக்கின்றன.	3	0
ஸ்ரீ பகவத்கீதை— கோயமுத்தூர் V. குப்புஸ்வாமி அய்யரால் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளுடனும், மதத்ரய பாஷ்யகாரர்களின் அபிப்ராய பேதங்களுடனும் கூடியது, ஒரே வால்யூமாக பைண்டு செய்யப்பட்டது.	9	0
ஸம்க்ஷேபராமாயணம்	0	8
சியாமளா தண்டகம்	0	3
பஜ கோவிந்தம் (நாகரலிபியிலும் மூலமுள்ளது)	0	4
தத்துவ போதம்	0	4
நீதி சாஸ்திரம்	0	6
டீகா அமரம் ரப்	2	8
ஷை கிளேஸ்	3	8
பாஷாமஞ்ஜரீ	0	6
அஷ்டக வர்க்கம்	0	10
விருத்தபாராசர்யம்	1	0
ஜாதகாலங்காரம்	0	12
காலாமிருதம் ரப்	1	8

நாகராக்ஷர புஸ்தகங்கள்

பிருஹத்ஸ்தோத்திர ரத்னாகரம்— இதில் 170 தேவதா ஸ்தோத்திரங்களடங்கியிருக்கின்றன	1	4
ஸம்ஸ்கிருத பிரதமசிக்ஷை	0	4
சியாமளா தண்டகம்—நவரத்னமாலிகையுடன்	0	1
பஜகோவிந்தம்—தமிழுரையுடன்	0	4
யஜுஸ் ஸந்தியாவந்தனம்—ஸ்வரத்துடன்	0	2
நித்யாந்ஹிகம்—யஜுர்வேதிகள் பிரதிதினமும் அவச்யமாய்ச்செய்ய வேண்டிய கர்மங்களின் மந்திரங்கள் ஸ்வரத்துடனடங்கி யிருக்கின்றன.	0	8
Do English Translation	0	8
ஸ்ரீ கிருஷ்ணவிலாஸம் - வியாக்யானத்துடன், இதில் ஸ்ரீகிருஷ்ண லீலைகள் அடங்கி யிருக்கின்றன.	0	12
நைஷதம் 1 முதல் 6 ஸர்க்கம் முடிய. மல்லிநாதரின் வியாக்யானத்துடன். சாதாபைண்டு 1-8. காலிகோ பைண்டு.	2	0
லலிதா ஸஹஸ்ர நாமம்	0	5
சுருதி சூக்திமாலை-வியாக்யானத்துடன்	3	0
சூதசம்ஹிதை-வித்யாரண்யரின் தாத்பர்ய தீபிகை என்ற வியாக்யானத்துடன்	5	0
லலிதா த்ரிசதீ-நாமாவலியுடன்	0	3
ஸ்ரீ நீலகண்ட விஜயம்-வியாக்யானத்துடன்	2	6
கீத கோவிந்தம் - (அஷ்டபதீ) வியாக்யானத்துடன்	1	6
சப்தமஞ்ஜரீ	0	6
அமரகோசம்-பதங்களின் அகராதி கிரமத்துடன்	1	0
ஸ்ரீ ருத்திரம் சமகம்	0	3
ஸ்ரீ கிருஷ்ணகர்ணாமிருதம்	0	7

2.
ஸ்வயம்
வெ. பெரி. பழ.
மு. கா.
பாகனேரி
28. 2. 3

॥ श्रीः ॥

॥ श्रीराधाकृष्णपरब्रह्मणे नमः ॥

Y. M. C. ASSOCIATION PAGANERI.
PAGANERI.

பிருஹத்ஜாதகம்

நஷ்டஜாதகாத்தியாயம்

(அ-கை) இதுவரை சென்ற 26 அத்தியாயங்களால் ஜாதகம் எவனுக்கிருக்கின்றதோ அவனுக்கு ஜாதகமூல மறியப்படும் பலன்கள் உபதேசிக்கப்பட்டன. ஜாதகமில்லாதவனும் இனி வருங் காலத்திய பலந்தெரிந்து அதற்குத் தக்கப்படி நடந்து கொள்ளப் பிரியப்படும்பொழுது அவனும் தனது ஜாதகம் இன்னதுதான் என அறிந்து கொள்ளுவதற்குபாயத்தை யுபதேசிக்கும் அத்தியாயம் நஷ்டஜாதகாத்தியாயம் எனப்படும். அதன் முதல் சுலோகத்தால் பிரஸவ காலத்தை யறிவதற் குபாயத்தை "இந்திரவஜ்ரா" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

மூ०॥ आधानजन्मापरिबोधकाले संपृच्छतो जन्मवदेद्विलग्नात् ।
पूर्वापरार्धे भवनस्य विद्याद्भानावुदग्दक्षिणगे प्रसूतिम् ॥ १ ॥

(ப-ரை) **आधानजन्मापरिबोधकाले**—**आधान** = கர்ப்பாதான காலம் **जन्म**=ஜன்ம காலம் இவ்விரண்டின் **अपरिबोधकाले** = அறிவில்லாத சமயத்தில் **संपृच्छतः**=பிரச்னஞ் செய்கின்றவனுடைய **विलग्नात्**-பிரச்னகாலத்திலுதயமாகும் லக்கினத்தினின்றும் **जन्म**-ஜன்மலக்கினத்தை **वदेत्** - சொல்லவேண்டும். **भवनस्य**=பிரச்ன காலத்தி லுதயமான லக்கினத்தினுடைய **पूर्वापरार्द्धे**—**पूर्व** (**अर्द्ध**) முதல் ஹோரையிலோ, **अपरार्द्धे**=இரண்டாவது ஹோரையிலோ

இளைஞர் நூல் நிலையம்

(**प्रश्नेसति**=பிரச்னம்ஏற்பட்டால்) (**क्रमेण**=முறையே) **भानौ**-சூரியன் **उदग्दक्षिणगे–उदक् (गे)** முதல் ஹோரையில் பிரச்னம் ஏற்பட்டால் உத்தராயணத்தை யடைந்திருக்கும் பொழுதும் **दक्षिणगे**= இரண்டாவது ஹோரையில் பிரச்னம் ஏற்பட்டால் தக்ஷிணாயனத்திலிருக்கும்பொழுதும் **प्रसूतिम्**=பிறவியை **विद्यात्**- அறியவேண்டும்.

(தா-ம்) तत्कालमिन्दुसहितो द्विरसांशकोय

स्तत्तुल्यराशिसहिते पुरतश्शशांके ।

यावानुदेति दिनरात्रिसमानभाग

स्तावद्गते दिननिशोः प्रवदन्ति जन्म ॥

என்று 4-வது அத்தியாயம் 21-வது சுலோகத்தில் எவனுக்குக் கர்ப்பாதான காலமறியப் படுமோ அதைக்கொண்டு அவனுடைய ஜன்ம காலமானது முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் ஜன்ம காலமும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அம்முறைப்படி எவன் விஷயத்தில் ஆதான காலமோ, ஜன்ம காலமோ அறியக்கூடாததாக விருக்கின்றதோ அத்தகைய ஜாதகனுக்கு ஜனன காலம் அறியவேண்டி வரும்பொழுது அந்த ஜாதகனே நேரில் வந்து பிரச்னம் செய்யும் காலத்தில் மேஷம் முதல் மீனம் வரையுள்ள லக்கினங்களும் எந்த லக்கினம் ப்ரச்னகாலத்தில் உதயமாகின்றதோ அந்த லக்கினத்தைக் கொண்டு அவனது ஜாதகத்தைக் கண்டறிய வேண்டும் அவ்வித மறிவதில் பிரச்ன காலத்தி லுதயமான லக்கினத்தினுடைய பூர்வார்த்தத்தில் (அதாவது: முதலாவது ஹோரையில்) பிரச்னம் நிகழ்ந்தால் அதைக்கொண்டு பிரச்னம் செய்பவர் உத்தராயணத்தில் (அதாவது: மகரம்முதல் மிதுனம் முடியவுள்ள ஆறு ராசிகளுள் ஒன்றில் சூரியனிருக்கும்பொழுது) பிறந்தவர் என்று கண்டு கொள்ள வேண்டும். இவ்விதமே பிரச்னலக்கினத்தின் பிற்பாதியில் பிரச்னம் நிகழ்ந்தால் சூரியன் தக்ஷிணாயனத்தை யடைந்த காலத்தில் (அதாவது: கடகம் முதல் தனுஸ் முடியவுள்ள ராசிகளுள் ஒன்றில் சூரியனிருக்கும்பொழுது) பிறந்தவன் என்றறிய வேண்டும். இந்தச் சுலோகத்தால் ஆதான காலமோ ஜனன காலமோ அறியப்படாதவன். விஷயத்தில் அவனது பிரச்ன

காலத்தி லுதயமாகும் லக்கினத்தினின்றும் லக்கினத்தின் முதல் ஹோரையில் பிரச்னமானால் உத்தராயணத்தில் பிறந்தவனென்றும், இரண்டாவது ஹோரையில் பிரச்னமானால் தக்ஷியணாயனத்திற் பிறந்தவனென்றும் அறிவிக்கப்பட்டதாக அறியவேண்டும். (எ - று.)

(அ - கை) ஜாதகன் பிறந்த வருஷம், ருது இவற்றை யறிவதற் குபாயத்தை "உபஜாதிகா" என்ற விருத்தத்தா லுபதேசிக்கிறார்.

மூ॰॥ लग्नत्रिकोणेषु गुरुस्त्रिभागैर्विकल्प्य वर्षाणि वयोऽनुमानात् ।
ग्रीष्मोऽर्कलग्ने कथितास्तु शेषैरन्यायनर्ताॄतुरर्कचारात् ॥ २ ॥

(ப - ரை) **त्रिभागैः**=பிரச்ன லக்கினத்தி லுதயமான திரேஷ்காணங்களால் **लग्नत्रिकोणेषु**=ஜன்ம லக்கினத்திற்கு திருகோணங்களில், அதாவது: 1, 5, 9-மிடங்களில் **गुरुः**=குருவானவன் (**ज्ञेयः**= இருப்பதாக அறியத்தகுந்தவன்.) **वयोऽनुमानात्**=பிரச்னம் செய்கின்றவனுடைய வயதின் அனுமானத்தினின்றும் (சரீர நிலையினின்றும் வயதை ஊஹித்தறிவதி னின்றும்) **विकल्प्य** = ஜன்ம காலத்தில் குருவிருப்பதாக வேற்படும் ராசியிலிருந்து பிரச்னம் செய்கின்ற காலத்தில் குருவிருக்கும் ராசிவரையுள்ள காலங்களை பன்னிரண்டு, பன்னிரண்டாகக் கழித்தறிந்து **वर्षाणि**=பிரச்னம் செய்கின்றவனுக்கு பிரச்னகாலம்வரைசென்றவருஷங்கள் (**ज्ञेयानि** அறியத்தக்கன) **अर्कलग्ने**=பிரச்ன காலத்தி லுதயமான லக்கினத்தில் சூரியனிருந்தாலும் [சூரியனுடைய திரேஷ்காணமாவது (சிம்மத் திரேஷ்காணமாவது) உதயமானாலும்] **ग्रीष्मः** = ஜாதகன் பிறந்தது கிரீஷ்மருதுவென்று அறியத்தக்கது. **शेषैः**=மீதமுள்ள சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களைக் கொண்டு, அதாவது: சந்திரன் முதலியோர் லக்கினத்திலிருப்பதைக்கொண்டு **ऋतवः**=ருதுக்கள் **कथिताः**=முன்னரே சொல்லப்பட்டிருக்கின்றன. **अन्यायनर्तौ** = அயனம் வேறாகவும், அதில் சம்பவியாதபடி ருது வேறாகவும் மாறிவரும்பொழுது **अर्कचारात्** சூரியனுடைய சாரத்தைக்கொண்டு **ऋतुः**=ருதுவானது (**ज्ञेयः**=

அறியத்தக்கது. அதாவது: ஸௌரமானத்தைக்கொண்டு ருது நிர்ணயம் செய்யவேண்டும்.)

(தா - ம்) ஒவ்வொரு லக்கினத்திற்கும் மும்மூன்றுத் திரேஷ்காணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பிரச்ன லக்கினத்தில் முதல் திரேஷ்காண முதயமானால் ஜனன காலத்தில் ஜன்ம லக்கினத்தில் குருவிருக்கும் பொழுது பிறந்தவனென்றும், இரண்டாவது திரேஷ்காண முதயமானால் ஜனன காலத்தில் ஜன்ம லக்கினத்திற்கு 5-மிடத்தில் குருவிருக்கும் பொழுது பிறந்தவனென்றும், மூன்றாவது திரேஷ்காண முதயமானால் ஜனனகாலத்தில் ஜன்ம லக்கினத்திற்கு 9-மிடத்தில் குருவிருக்கும் பொழுது பிறந்தவன் என்று மறியவேண்டும். இவ்விஷயத்தில் வேறுசிலர் கூறுவதாவது:—பிரச்ன லக்கினத்தில் முதல் திரேஷ்காண முதயமானால் பிரச்ன காலத்தி லுதயமான ராசியினின்றும் எத்துணை யாவது ராசியில் பிரச்னகாலத்தில் குருவிருக்கின்றானோ, குருவிருக்கின்ற அந்தராசியின் எண்ணுக்கொப்பானவயதுகள் பிரச்னம் செய்கின்றவனுக்கு ஆயினவென்றும், இவ்விதமே பிரச்ன லக்கினத்தில் இரண்டாவது திரேஷ்காண முதயமானால் பிரச்ன லக்கினத்திர்க்கு ஐந்தாவது ராசியிலிருந்து எத்துணையாவது ராசியில் பிரச்ன காலத்தில் குருவிருக்கின்றானோ அவ்வளவு வயதுகள் பிரச்னம் செய்கின்றவனுக்கு ஆயினவென்றும், பிரச்ன லக்கினத்தில் மூன்றாது திரேஷ்காண முதயமானால் பிரச்ன கால லக்கினத்திற்கு 9-வது ராசியிலிருந்து எத்துணையாவது ராசியில் பிரச்ன காலத்தில் குரு விருக்கின்றானோ, அவ்வளவு வயதுகள் பிரச்னம் செய்கின்றவனுக்கு ஆயினவென்றும் அறியவேண்டும் என்கின்றனர் என்பதாம்.

இவ்விதம் இவர்கள் சொல்வது யவனேசுவரர் முதலியோரின் கருத்துக்கு முரண்பட்டதா யிருப்பதுபற்றி ஏற்கத்தக்கதன்று எனப் பட்டோத்பலர் சொல்லியிருக்கிறார். யவனேசுவரர் சொல்லுவதாவது:—

द्रेष्काणलग्नक्रमतस्तु राशौ गुरुर्विलग्नादित्रिकोणगोऽभूत् ।
समुद्गते तद्भवनक्रमेण स्वचारभादब्दगतिं प्रगणय्यात् ॥

என்பதாம். மேலும் பிரச்ன லக்கினத்தை 12பங்காகப் பிரிப்பது, "துவாதசாம்சவிபாகம்" எனப்படும். பிரச்ன லக்கினத்தின் முதலாவது துவாதசாம்ச முதயமானால் ஜனனகாலத்திய ஜன்மலக்கினத்தில் குருவிருக்கும்போது பிறந்தவனென்றும், பிரச்ன லக்கினத்தில் இரண்டாவது துவாதசாம்சமுதயமானால் ஜன்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் குருவிருக்கும் பொழுது பிறந்தவனென்றும், இவ்விதமே 3-வது துவாதசாம்சம் முதல் 12-வது துவாதசாம்சம் வரையுள்ள துவாதசாம்சங்களின் உதயத்தைக்கொண்டு ஜன்ம லக்கினத்திற்கு 3 முதல் 12 முடியவுள்ள விடங்களில் குருவிருக்கும்பொழுது பிறந்தவன் என்றும் கண்டுகொள்ளவேண்டும். இவ்விதம் ஜன்ம காலத்தில் குருவிருக்கும் நிலையை யறிந்தபின்னர் பிரச்னம் செய்கின்றவனது சரீர நிலையைக்கொண்டு சுமார் இவ்வளவு வயதுள்ளவனாக விருப்பான் என்பதை ஊஹித்துக் கொள்ளவேண்டும். பொதுவாய் குரு ஒருதடவை 12 ராசிகளிலும் சுற்றி வருவதற்குச் சுமார் 12 வருஷங்களாகின்றன. குரு பிரச்னகாலத்தில் எந்த ராசியிலிருக்கின்றதோ அந்த ராசியினின்றும், சரீர நிலையைக்கொண்டு சுமாராக வூஹிக்கப்பட்ட வயதுகளில் பன்னிரண்டு பன்னிரண்டாகக்கழித்து வரும்பொழுது முதலாவது பன்னிரண்டிலா? இரண்டாவது பன்னிரண்டிலா? அல்லது மூன்றாவது பன்னிரண்டிலாவென்பதை சுலபமாயறிந்து கொள்ளக்கூடும். மேலும் முன்னர் பிரச்ன லக்கினத்திலுதயமான துவாதசாம்சப் பிரிவைக்கொண்டு உபதேசிக்கப்பட்ட முறையையும் இங்கு சொல்லியதையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது இவ்விரு முறையாலும் குருவிருக்குமிடம் ஒன்று யறியப்படுவதிலிருந்து ஜன்மலக்கினமும் இன்னதுதான் என்று அறியப்பட்டதாகவாகும். எந்த விடத்தில் 12 வருஷங்களுக்குள் சந்தேக முண்டாகின்றதோ அவ்விடத்தில் பின்வருமாறு அதை நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும். அதாவது.

पादौ सगुल्फौ प्रथमं प्रदिष्टं जंघे द्वितीयस्तु सजानुवक्रे ।
मेढ्रोरुमुष्काश्च ततस्तृतीयं नाभिं कटिं चेति चतुर्थमाहुः ॥

उदरं कथयन्ति पञ्चमं हृदयं षष्ठमथं स्तनान्वितम् ।
अथ सप्तममंसजत्रुणी कथयन्त्यष्टममोष्ठकन्धरे ॥
नवमं नयने च सभ्रुणी सललाटं दशमं शिरस्तथा ।
अशुभेष्वशुभं दशाफलं चरणाद्येषु शुभेषु शोभनम् ॥

குதிக்காலுடன் கூடியபாதங்களை முதல் தசையாகவும், முழந்தாள், முகம் இவற்றுடன் கூடிய கணுக்கால்களை இரண்டாவது தசையாகவும், ஆண்குறி, துடைகள், இருகொட்டைகள் இவைகளை மூன்றாவது தசையாகவும், உந்தி இடை இவற்றை நான்காவது தசையாகவும், வயிற்றை ஐந்தாவது தசையாகவும், ஸ்தனங்களுடன்கூடிய மார்பை ஆறாவது தசையாகவும், தோள், இரண்டு கன்னங்கள் இவைகளை ஏழாவது தசையாகவும், உதடு, கழுத்து இவைகளை எட்டாவது தசையாகவும், புருவத்துடன் கூடிய கண்களை ஒன்பதாவதான தசையாகவும், நெற்றியுடன் கூடின சிரஸ்ஸை 10-வதான தசையாகவும், பகுத்தறியவேண்டும். சரணம் முதலிய விடங்களில் அசுபக் கிரஹங்களிருப்பார்களானால் தசாபலனும் அசுபமாகவே இருக்கும். சுபர்கள் சரணம் முதலிய விடங்களி லிருப்பார்களானால் தசாபலனும் சுபமாகவே தானிருக்கும் என்றறியவேண்டும் என்று ப்ருஹத் ஸம்ஹிதையில் புருஷலக்ஷணாத்தியாயத்திற் சொல்லியபடி 10 வருஷ தசையைச் சரீர அவயவங்களிற் கற்பித்துக்கொண்டு பிரச்னம் செய்கின்றவனைக்கொண்டு அவனது சரீரத்தின் அவயவங்களுள் ஒன்றைத் தொடச்சொல்லி எந்த அவயவத்தைத் தொடுகிறானோ அந்த அவயவத்திற்கு எத்துணையாவது வருஷ தசை சொல்லப்பட்டிருக்கிறதோ அத்துணையாவது வயதுள்ளவன் என்று கண்டுகொள்ளவேண்டும். தசாபிரிவினை சொல்லிய விடத்தில் குறிக்காத அவயவங்களைத் தொடுவானாயில் 10 வயதிற்குமேல் 12 வயதிற்குட்பட்டவனென்று கண்டு கொள்ள வேண்டும். ஆகவே 12 வயதிற்குட்பட்ட ஜாதகன் விஷயத்தில் நேரும் சந்தேகத்தை மேற்கூறியபடி விளக்கிக்கொள்ளுதல் வேண்டுமென பட்டோத் பலர் தமது உரையில் எழுதியிருக்கிறார்.

எவனுக்கு 120 வருஷங்களுக்குமேல் வயதாகிவிட்டதோ அவன் விஷயத்தில் நஷ்ட ஜாதகம் எடுக்கும்முறையே சம்பவிக்காது என்று மறியவேண்டும். இவ்விதம் வயதை யறிந்தபிறகு எந்த லக்கினத்தில் பிரச்னம் செய்யப்படுகிறதோ அதில் சூரியனிருந்தாலும், அல்லது அந்தப் பிரச்ன லக்கினத்தில் சூரியனுடைய திரேஷ்காண முதயமானாலும், அதைக்கொண்டு ஜாதகன் பிறந்தது கிரீஷ்மருதுவில் என்றறியவேண்டும். இவ்விதமே பிரச்ன லக்கினத்தில் சனியோ, சனியின் திரேஷ்காணம் உதயமாகியோ இருந்தால் சிசிரருதுவில் பிறந்தவனென்றும், லக்கினத்தில் சுக்கிரனோ, சுக்கிரனின் திரேஷ்காண முதயமாகியோ இருந்தால் வசந்தருதுவில் பிறந்தவனென்றும், லக்கினத்தில் செவ்வாயோ, செவ்வாயின் திரேஷ்காணம் உதயமாகியோ இருந்தால் கிரீஷ்மருதுவில் பிறந்தவனென்றும், லக்கினத்தில் சந்திரனோ, சந்திரனின் திரேஷ்காண முதயமாகியோ இருந்தால் வர்ஷருதுவில் பிறந்தவனென்றும், லக்கினத்தில் புதனோ. புதனின் திரேஷ்காண முதயமாகியோ இருந்தால் சரத்ருதுவில் பிறந்தவனென்றும், லக்கினத்தில் குருவோ, குருவின் திரேஷ்காண முதயமாகியோ இருந்தால் ஹேமந்தருது வில் பிறந்தவன் என்று மறியவேண்டும். அனேகம் கிரஹங்கள் லக்கினத்திலிருந்தால் அப்பொழுது வலுவுள்ளக் கிரஹம் எதுவோ, அதற்குச்சொல்லிய ருதுவில் பிறந்தான், என்று கண்டுகொள்ளவேண்டும். மேலும் அயனம், வேறாகவும், ருது, வேறாகவும் மாறிவருமானால் அப்பொழுது சூரியனுடைய சாரத்தைக்கொண்டு ருது நிர்ணயம் செய்யவேண்டும். அதாவது: ஸௌரமானத்தைக்கொண்டு ருது நிர்ணயம் செய்யவேண்டும். சூரியன் மேஷராசியில் பிரவேசித்து மீனராசியை விட்டகலும்காலம் வரையுள்ள காலம் ஸௌரமானம் எனப்படும். இதில் 365 தினங்களும், 15 நாழிகைகளு மடங்கி இருக்கும்.

இவ்விதம் அயனம், ருது இரண்டும் மாறிவரும்பொழுது சாந்திரமானத்தைக்கொண்டு ருது நிர்ணயம் செய்தல் தகா. ஆகவே சிசிர ருதுவென்று அறியப்படும்பொழுது சூரியன் மகரம் கும்பம் இவ்விரண்டு ராசிகளிலிருப்பதாகக் கொள்ளல்

வேண்டும் என்பதாம். இவ்விதமே மற்ற ராசிகளினு மூஹித்தறியவேண்டும். இவ்விதம் கூறியதிலிருந்து லோகத்தில் கொள்ளப்படும் சாந்திரமானம் இவ்விஷயத்தில் பயன்தருமென்று ஏற்பட்டது. பங்குனிமாதத்திய சுக்கிலபக்ஷப் பிரதமை முதற்கொண்டு பங்குனி மாதத்திய அமாவாஸ்யா வரையிலுள்ள காலம் சாந்திரமானம் எனப்படும். இதில் ஒரு வருஷத்திற்கு 354 நாட்கள் அடங்கி இருக்கும். (எ - று)

(அ - கை) அயனம் மாறிவரும் காலத்தில் கிரஹங்களைக் கொண்டு ருதுவையும், மாதங்களையும் அறிவதற்குபாயத்தை "இந்திர வஜ்ரா" என்ற விருத்தத்தானுபதேசிக்கிறார்.

மூ॥ चन्द्रज्ञजीवाः परिवर्तनीयाः शुक्रारमन्दैरयने विलोमे ।
द्रेष्काणभागे प्रथमे तु पूर्वो मासोऽनुपाताच्च तिथिर्विकल्प्यः॥ ३

(ப - ரை) अयने=அயனமானது विलोमेसति = மாறி வரும் பொழுது चन्द्रज्ञजीवाः=சந்திரன், புதன், குரு இவர்கள் शुक्रारमन्दैः=சுக்கிரன், செவ்வாய், சனி இவர்களைக்கொண்டு परिवर्तनीयाः மாற்றிக் கொள்ளத்தக்கவர்கள். द्रेष्काणभागे=திரேஷ்காண பாகங்களுள் प्रथमे=முன்பாகம் उदयति=பிரச்ன லக்கினத்தில் உதயமானல் पूर्वोमासः=ருதுவின் முதல் மாதமென்றும் (द्वितीये=திரேஷ்காணத்தின் இரண்டாவது பாக முதயமானல் ருதுவில் இரண்டாவது மாதமென்றும்) अनुपातात्=திரைராசிகம் செய்யும் முறையைக்கொண்டு तिथिः=திதியும் विकल्प्यः=பிரித்தறியத்தகுந்தது.

(தா - ம்) அயனம் உத்தராயணமாகவும், ருது வர்ஷ ருதுவாகவும் மாறிவருமானல் அப்பொழுது ஜாதகன் பிறந்தது வஸந்தருது என்றறியவேண்டும். இவ்விடத்தில் சந்திரனுடைய ருதுவாகச் சொல்லப்பட்ட வர்ஷருதுவானது சுக்கிரனுடைய ருதுவாகச் சொல்லப்பட்ட வஸந்தருதுவாகக் கொள்ளப்பட்டதால் சுக்கிரனைக்கொண்டு சந்திரன் மாற்றப்பட்டிருப்பதா யறியவேண்டும். மேலும் அயனம் உத்தராயணமாகவும் ருது சரத்ருதுவாகவும் மாறிவருமிடத்தில் கிரீஷ்மருதுவில் ஜாதகன் பிறந்தா

னென்றும், இதுபோலவே அயனம் தக்ஷிணாயனமாகவும், ருதுகிரீஷ்மமாகவும் மாறி வரும்பொழுது சரத்ருதுவில் பிறந்தா னென்றும் அறியவேண்டும். இங்கு சூரியன் செவ்வாய் இவர் களைக்கொண்டு புதனும், புதனைக்கொண்டு சூரியன் செவ்வாய் இவர்களும் மாற்றி அறியப்பட்டனர். எவ்விதமெனில்:- புதனுக்கு சரத்ருதுவென்றும், சூரியன், செவ்வாய் இவர் களுக்கு கிரீஷ்மருதுவென்றும் முன்னர் சொல்லப்பட்டிருப்பதா லென்க. இவ்விதமே அயனம் உத்தராயணமாகவும் ருது ஹேமந்த ருதுவாகவும் மாறி வரும்பொழுது சிசிரருதுவில் பிறந்தவனென்றும், அயனம் தக்ஷிணாயனமாகவும், ருது சிசிர ருதுவாகவும் மாறிவருங்கால் ஹேமந்தருதுவில் பிறந்தவனென் றுமறியவேண்டும். இங்கு குரு, சனி இவர்கள் ஒருவருக்கொரு வர் மாற்றப்பட்டனர். சித்திரையும், வைகாசியும் வஸந்தருது வென்றும், ஆனியும் ஆடியும் கிரீஷ்மருதுவென்றும், ஆவணியும் புரட்டாசியும் வர்ஷருது வென்றும், அற்பிசியும், கார்த்திகை யும் சரத்ருதுவென்றும், மார்கழியும், தையும் ஹேமந்த ருது வென்றும், மாசியும் பங்குனியும் சிசிரருது வென்றும் அறிய வேண்டும்.

இவ்விதம் ருதுவை யறிந்தபின்னர் மாஸத்தை யறிய வேண்டும். அம்முறையாவது: பிரச்ன லக்கினத்திலுதயமாகும் திரேஷ்காணத்தில் முதல் பாக முதயமானல் அப்பொழுது முற் கூறிய ருதுவின் முதல் மாதத்தில் பிறந்தவனென்றும், இரண் டாவது பாக முதயமானல் முற்கூறிய ருதுவின் இரண்டாம் மாதத்திற் பிறந்தவனென்றும் அறியவேண்டும். திரைராசிகம் செய்யும் முறையால் திதியை யறியவேண்டும். அதாவது: உதயமான லக்கினத்தில் 600 கலைகள் கொண்டது ஒரு திரேஷ் காணமாகும். முற்கூறிய திரேஷ்காணத்தின் 600 கலைகளின் பகுதி 300 கலைகளாகும். திரேஷ்காணத்தை 2பங்காகப்பிரித்து முன் பாகத்தைக்கொண்டு ருதுவின் முதல்மாதமென்றும், பின் பாகத்தைக்கொண்டு ருதுவின் பின்னுள்ள 2-வது மாதமென் றும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே திரேஷ்காணத்தின் பகுதியான 300 கலைகளைக்கொண்டு மாதமறிதலுபதேசிக்கப்

பட்டது. ஒருமாதத்திற்கு 30 திதிகளாகையால் திதி ஒன்றிற்கு 10 கலைகளாகின்றன. ஆகவே பத்துப் பத்து கலைகளைக்கொண்டு திதிகளை யறியவேண்டும் என்றேற்படுகின்றது. அதாவது இரண்டாவது சுலோகத்தில் ஸௌரமானத்தைக் கொண்டு ருதுவை யறியவேண்டும் என்று சொல்லியிருப்பதாலும், இங்கும் பிரச்ன லக்கினத்திலுதயமான திரேஷ்காணத்தின் முன்பாகத்தைக்கொண்டு ருதுவின் முதல் மாதத்தையும், பின்பாகத்தைக் கொண்டு ருதுவின் பின்னுள்ளமாதத்தையும் அறியவேண்டுமென்று சொல்லி இருப்பதாலும் திரேஷ்காணத்தின் 600 கலைகளில் முன்னுள்ள 300 கலைகளைக்கொண்டும், பின்னுள்ள 300 கலைகளைக்கொண்டும் ஒரு ருதுவிலடங்கிய 2 மாதங்களறியவேண்டியதாகவே ஏற்படுவதாலும், 300 கலைகளால் சூரியனுடைய ஒரு ராசி சஞ்சாரமறிவிக்கப்பட்டதா யாகின்றது. ஆகவே பிரச்ன லக்கினத் திரேஷ்காணத்திலுள்ள 10 கலைகளால் அறியப்பட்ட ராசியில் சூரியன் ஒருபாகத்தைக் கடக்கிறான் என்றேற்பட்டது. இவ்வித முபதேசித்ததிலிருந்து சூரியன் சஞ்சரிக்கும் ராசி, அந்த ராசியில் சூரியன் சென்றிருக்கும் பாகம் இவற்றையறிந்த பின்னர், பிரச்ன லக்கினத்திலுதயமான திரேஷ்காணத்திலுள்ள 10 கலைகளுக்கு ஒரு திதியானால் அந்த ராசியில் சூரியன் எவ்வளவு பாகம் கடந்திருப்பதாக ஏற்படுமோ திதியும் பிரதமை முதல் அவ்வளவு ஆயிற்றென்று அறிவிக்கப்பட்டதாயாகின்றது. ஆகவே மாதம், ராசி, திதி, பாகங்கள் இவையறிவிக்கப்பட்டதாயாகிவிட்டன. இதிலிருந்து அறியப்பட்ட வருஷம் மாதம் இவற்றில் சூரியன் எந்தத் திதியிலிருப்பானோ அந்தத் திதியிலேயே ஜாதகன் பிறந்தான் என அறியவேண்டும். (எ - று).

(அ - கை) இரண்டாவது சுலோகத்தால் ஸௌரமானத்தையொட்டி திதியறிவதற்குரிய உபாயமுபதேசிக்கப்பட்டது. சாந்திரமானப்படி திதியை யறிவதற்குபாயத்தை "இந்திரவஜ்ரா" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

மூ॰॥ अत्रापि होरापटवो द्विजेन्द्रास्सूर्यांशतुल्यां तिथिमुद्दिशन्ति ।
रात्रिद्युसंज्ञेषु विलोमजन्म भागैश्च वेळाः क्रमशो विकल्प्याः॥४॥

(ப-ரை) अत्रापि=திதியையறியும் இவ்விஷயத்தில் होरापरवः=ஹோரா சாஸ்திரத்தில் நிபுணர்களான द्विजेन्द्राः = பிராம்மண சிரேஷ்டர்களான மஹருஷிகள் तिथिम्=திதியை सूर्यांशतुल्याम्=சூரியன் லக்கினத்திற் சென்றிருக்கும் அம்சத்திற் கொப்பானதாக उद्दिशन्ति=சொல்லுகின்றனர். रात्रिद्युसंज्ञेषु = பிரச்ன காலத்தில் ராத்திரி ஸம்க்ஞமாயும் திவா (பகல்) ஸம்க்ஞமாயுமுள்ள ராசிகள் (उदितेषु=உதயமாகுமானல்) विलोमजन्म=உதயமான ராசிக்கு மாருனகாலத்திற் பிறவியை (वदेत् சொல்லவேண்டும்) भागैः பிரச்னகாலத்திற் சென்ற பாகங்களைக்கொண்டு वेलाः=ஜனன காலங்கள் विकल्प्याः=அறியத்தக்கன.

(தா ம்) பிரச்னகாலத்தில் சூரிய ஸ்புடம் செய்து பார்க்கும் பொழுது சூரியன்தானிருக்கும் ராசியில் எவ்வளவுபாகங்கள் சென்றிருப்பதாக ஏற்படுமோ அவ்வளவு திதிகள் சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் சென்றிருப்பதாக அறியவேண்டும். அதாவது பிரச்னகாலத்தில் சூரியன் ஒரு ராசியில் 25 பாகங்கள் சென்றிருந்தால் ஜாதகனுக்கு சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் 25 திதிகள் சென்றன வென்றறியவேண்டும். சுக்கிலபக்ஷத்தில் 15 திதிகளும், கிருஷ்ணபக்ஷத்தில் 10 திதிகளும் சென்று விட்டனவென்றேற்படும் என்பதாம். சாந்திரமானப்படி திதி நிர்ணயமறியும் முறை இவ்விதமாகும். இந்தச் சாந்திரமான முறையில் ஜாதகன் பிறந்தது மகரமாதம் என்றேற்படுமானல் "மாக" மாதம் என்றறியவேண்டும். இவ்விதமே மற்றச் சாந்திரமான மாத விஷயத்திலும் கண்டுகொள்க. இவ்விதம் தினத்தையறிந்தபின்னர் ஜனனம் இரவிலா, பகலிலா, வென்றதையறியவேண்டும். மேஷம், விருஷபம், மிதுனம், கடகம், தனுஸ், மகரம் இவ்வாறு ராசிகளும் பகல் ராசிகளென்றும் மற்றவை ராத்திரி ராசிகளென்றும் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆகவே பிரச்னகாலத்தில் ராத்திரி ராசிகள் உதயமாகுமானல் பகலில் ஜனித்தவனென்றும், பகல் ராசிகளுதயமாகுமானல் இரவில் ஜனித்தவனென்றும் மாற்றியறிந்துகொள்ளவேண்டும். இவ்விதம் இரவு பகல் இவற்றையறிந்தபின்னர் ஜனனமான நாழிகை இன்னதென்பதை யறியவேண்டும். எந்த தினத்தில் ஜாதகன்

பிறந்தானென்பதை யறிந்தோமோ அன்று சூரியனிருக்கும் ராசியு மறியப்பட்டதாகவே யாகும். பகலில் ஜனனமா? இரவில் ஜனனமா? என்பதையும் முன்னர் கூறிய முறையினின்று மறிந்திருக்கிறோம். பகலிலோ இரவிலோ எத்துணை நாழியில் பிறந்தானென்பதுமட்டும் அறியப்படவேண்டியதாக மீதமிருக்கிறது. ஜாதகன் ஜனித்தது பகலென்றேற்பட்டால், அக்காலம் சூரியனிருக்கும் ராசியைக்கொண்டு அந்தந்த தேசத்திற்குதக்கபடி அஹர்மானத்தை (பகற்குரிய மொத்த நாழிகையை) நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். இரவில் ஜனனமென்றேற்பட்டாலும் ராத்திரியின் மொத்த நாழிகையையும் நிர்ணயித்துக் கொள்ளல்வேண்டும். இவ்விதம் நிர்ணயித்த பிறகு ப்ரச்னகால லக்கினத்தில் எவ்வளவு கலைகள் சென்றிருக்கின்றனவோ அவை களைக்கொண்டுத் திரைராசிகம் செய்து ஜனனகால நாழிகையை யறியமேண்டும், அதாவது: ப்ரச்னகாலத்தில் சூரியன் எந்தராசியில் எவ்வளவு பாகம் சென்றிருக்கிறதோ அப்பாகங்களைக்கலைகளாக்கிக்கொண்டு ராத்திரி ஜனனமாக ஏற்பட்டால் பகற்குரிய அகஸ்பிரமாணத்தால் சூரியன் சென்ற கலைகளைப் பெருக்கி ராத்திரிக்குரிய மொத்த நாழிகையால் வகுத்துவந்த ஈவு ராத்திரியில் ஜாதகன் ஜனித்த நாழிகையாகும். இவ்விதமே பகல் ஜனனமாக ஏற்பட்டால் ராத்திரிக்குரிய மொத்த நாழிகையைக் கொண்டு சூரியன்ப்ரச்னகாலத்தில்ராசியில் சென்றிருக்கும் கலைகளைப்பெருக்கிபகற்குரிய அஹஸ்பிரமாண நாழிகையால் வகுத்துவரும் ஈவு ஜாதகன் பகலிற் ஜனித்த நாழிகையென்று ஏற்படும். ஈவுபோக மீதத்தை 60-ஆல் பெருக்கி அஹஸ்பிரமாண நாழிகையால் வகுத்துவரும் ஈவு விநாடிகையாக யேற்படும். இதிலும் மீதமிருந்தால், இதையும் 60-ஆல் பெருக்கி முன்போல் வகுத்துவரும் ஈவு தற்பரையாக வேற்படும். (எ-று)

(அ-கை) வேறு முறையால் மாதத்தை யறிவதற்குபாயத்தை "இந்திரவஜ்ரா" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

मू०॥ केचिच्छशांकाध्युषितान्नवांशात् शुक्लांतसंज्ञं कथयन्ति मासम् ।
लग्नत्रिकोणोत्तमवीर्ययुक्तं संप्रोच्यतेऽङ्गालभनादिभिर्वा ॥ ५ ॥

(ப - ரை) केचित्=சில ஆசிரியர்கள் शशांकाध्युषितात्=சந்திர னுலடையப்பட்ட नवांशात् = நவாம்சத்தினின்றும் शुक्लांतसंज्ञम्=சுக்லாந்தமெனப் பெயரிய मासम्=மாதத்தை कथयंति = சொல்லு கின்றனர். लग्नत्रिकोणोत्तमवीर्ययुक्तम्-लग्न=பிரச்ன லக்கினத்திற்கு त्रिकोण=5, 9 மிடங்களுள் उत्तमवीर्ययुक्तम्=அதிகமான வீரியத்து டன் கூடினதைக்கொண்டு (मासः=மாதம்) संप्रोच्यते=சொல்லப் படுகிறது. अङ्गालभनादिभिर्वा=தனது அங்கங்களைத் தொடுதல் முதலியவற்றைக் கொண்டாவது. (मासनिर्णयः कार्यः=மாதநிர்ண யம் செய்யவேண்டும்).

(தா - ம்) பிரச்னகாலத்தில் எந்த நவாம்சத்தில் சந்திர னிருக்கின்றனோ அந்த நவாம்சத்தை ஒன்பது பங்காகப்பிரித்து அந்த நவாம்சத்தில் சந்திரன் எந்த பாகத்திலிருக்கின்றன் என் பதையறிந்து அதனின்றும் சந்திர நவாம்சத்தையடைந்த நக்ஷத் திரத்தை யறியவேண்டும். அதாவது: சந்திரனிருக்கும் நவாம் சத்திற்கு நக்ஷத்திரம் இன்னதென்றறிந்துகொண்டு அந்தநக்ஷத் திரத்துடன் கூடிய பூர்ணிமை எந்தமாதத்தில் வருமோ அதர்க் குரிய சாந்திரமான மாதத்தில் ஜனித்தவன் என்றறியவேண்டும் என்பதாம். எந்த நக்ஷத்திரங்களில் சந்திரனிருப்பதைக் கொண்டு அன்னக்ஷத்திரங்களின் பெயரால் மாதமழைக்கப்படுவ தில்லையோ அவ்விடத்தில் குருசாரத்திற் சொல்லியமுறையை யொட்டி சுக்லாந்தமாதம் அறியத்தக்கது. அதாவது: எந்த மாதத்தில் சூரியனிருக்கும் ராசிக்கு நேர் ஏழாவதான ராசியில் கிருத்திகை, ரோஹிணி இவ்விரண்டு நக்ஷத்திரங்களிலும் சந்தி ரன் சஞ்சரிப்பானே அந்தமாதம் கார்த்திகம் என்றும், சூரிய னிருக்கும் ராசிக்கு நேர் ஏழாவதான ராசியில் மிருகசீர்ஷம் திருவாதிரை இவ்விரண்டிலும் சஞ்சரித்தால் அம்மாதம் மார்க்க சீர்ஷம் என்றும், சூரியனிருக்கும் ராசிக்கு நேர் ஏழாவது ராசி யில் புனர்பூசம், புஷ்யம் இவ்விரண்டிலும் சஞ்சரித்தால் அம் மாதம் पौषम् என்றும், சூரியனிருக்கும் ராசிக்கு நேர் ஏழாவது ராசியில் ஆயில்யம். மகம் இவ்விரண்டிலும் சந்திரன்சஞ்சரித்தால் அம்மாதம் "மாகம்" என்றும், சூரியனிருக்கும் ராசிக்கு நேர் ஏழாவது ராசியில் பூரம், உத்திரம், ஹஸ்தம் இம்மூன்றிலும்

சந்திரன் சஞ்சரித்தால் அம்மாதம் "பால்குனம்" என்றும். சூரியனிருக்கும்ராசிக்கு நேரேழாவது ராசியில் சித்திரை, சுவாதி இவ்விரண்டிலும் சந்திரன் சஞ்சரித்தால் அம்மாதம் "சைத்ரம்" என்றும், சூரியனிருக்கும் ராசிக்கு நேரேழாவது ராசியில் விசாகம், அனுஷம் இவ்விரண்டிலும் சந்திரன் சஞ்சரித்தால் அம்மாதம் "வைசாகம்" என்றும், சூரியனிருக்கும் ராசிக்கு நேரேழாவது ராசியில் கேட்டை, மூலம். இவ்விரண்டிலும் சந்திரன் சஞ்சரித்தால் அம்மாதம் "ஜ்யேஷ்டம்" என்றும் சூரியனிருக்கும் ராசிக்கு நேரேழாவது ராசியில் பூராடம், உத்திராடம் இவ்விரண்டிலும் சந்திரன் சஞ்சரித்தால் அம்மாதம் "ஆஷாடம்" என்றும், சூரியனிருக்கும் ராசிக்கு நேரேழாவது ராசியில் திருவோணம், அவிட்டம் இவ்விரண்டிலும் சந்திரன் சஞ்சரித்தால் அம்மாதம் "சிராவணம்" என்றும், சூரியனிருக்கும் ராசிக்கு நேரேழாவதான ராசியில் சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி இம்மூன்று நக்ஷத்திரங்களிலும் சந்திரன் சஞ்சரிக்கும்பொழுது அம்மாதம் "பாத்ரபதம்" என்றும் ரேவதி, அசுவதீ, இவ்விரண்டு நக்ஷத்திரங்களிலும் சந்திரன் சஞ்சரிக்கும்பொழுது அம்மாதம் "ஆச்விஜம்" என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாதங்களே சுலோகத்திலுள்ள "சுக்லாந்த" என்றபதத்தா லுபதேசிக்கப்பட்டன வென்றறியவேண்டும். ஆகவே பிரச்னகாலத்தில் சந்திரன் விருஷப நவாம்சத்திலிருப்பதாக வைத்துக்கொண்டு சந்திரனிருக்கும் விருஷப நவாம்சத்தையும் ஒன்பது பங்காகப் பிரித்துக்கொண்டு ஒன்பது பங்காகப்பிரிக்கப்பட்ட அந்த விருஷப நவாம்சத்தில் 1-வது பங்கு முதல் 7-வது பங்குகளுக்குள் சந்திரனிருப்பதாகவும் ஏற்பட்டால், கிருத்திகை நக்ஷத்திரத்தின் 2 - 3 - 4 பாதங்களும், ரோஹிணியில் 1 - 2 - 3 - 4. பாதங்களும் சேர்த்து ஆக 7 பாதங்கள் மொத்தமாவதால், கிருத்திகை ரோஹிணீ இவ்விரு நக்ஷத்திரங்களுள் ஒரு நக்ஷத்திரத்தின் பெயர்கொண்டதாக எந்தச் சாந்திரமான மாதமாதத்தை வழங்குகிறோமோ அம்மாதத்தில் ஜனித்ததாக வேற்படும். இதுபோலவே முற்கூறிய விருஷப நவாம்சத்திலேயே முற்கூறிய 7-வது பங்குக்கு மேலும், மிதுன

நவாம்சத்தை 9-பங்காகப்பிரித்து அவ்வொன்பது பங்குகளுள் 6-பங்குக்குள்ளும் சந்திரன் ப்ரச்னகாலத்திலிருப்பதாக வேற்பட்டால் அப்பொழுது மிருகசீர்ஷம், 1-2-3-4 பாதங்களும், திருவாதிரை 1-2-3-4 பாதங்களும் சேர்த்து 8 பாதங்கள் சந்திர னிருக்குமிடமாகின்றன. ஆகவே ஜாதகன் மிருகசீர்ஷ நக்ஷத்திர சம்பந்தம்பெற்ற "மார்க்கசீர்ஷம்" என்ற சாந்திரமான மாதத்திற் பிறந்தவன் என்றேற்பட்டது. மேலும் அதே மிதுன நவாம்சத்தின் 7-வது பங்கு முதல் 9—பங்காகப் பிரிக்கப்பட்ட கடக நவாம்சத்தின் 5 பங்குக்குள் ப்ரச்னகாலத்தில் சந்திரனிருந்தால், புனர்பூசம், 1-2-3-4 பாதங்கள், புஷ்யத்தின் 1-2 3-4 பாதங்கள் ஆக 8பாதங்கள் சந்திரனிருக்குமிடமாக யேற்படும். ஆகவே ஜாதகன் புஷ்யநக்ஷத்திர சம்பந்தம்பெற்ற **பௌஷ்ய** என்ற சாந்திரமான மாதத்தில் பிறந்தவன் என்றேற்பட்டது. மேலும் கடக நவாம்சப்பங்கில் மீதமுள்ள 4பங்குகளிலும், 9பங்காகப்பிரித்த சிங்க நவாம்சத்தின் 4பங்குகளுக்குள்ளும் சந்திரனிருந்தால் அப்பொழுது ஆயில்யம் 4பாதம், மகம், 4பாதம், ஆக 8பாதங்களில் சந்திரனிருப்பதாக வேற்படும். ஆகவே ஜாதகன் மகாநக்ஷத்திர சம்பந்தம்பெற்ற **மாகம்** என்ற மாதத்திற் பிறந்தவன் என்றேற்படும். மேலும், சிங்கநவாம்சத்தில் மேலுள்ள 5பங்கிலும் 9பங்காகப் பிரிக்கப்பட்ட கன்னி நவாம்சத்தின் ஏழுபங்குகளுக்குள்ளும் பிரச்னகாலத்தில் சந்திரனிருந்தால், பூரம் 4பாதம், உத்திரம் 4பாதம் ஹஸ்தம் 4பாதம் ஆக 12பாதங்களிலும் சந்திரனிருப்பதாக யேற்படும். இவ்விடத்தில் "பூர்வ பல்குனீ" எனப்பூரமும், உத்திர பல்குனீ என உத்திரமும் அழைக்கப்படுவதால் இவ்விரண்டிலுமுள்ள பல்குனீ என்ற பதத்தின் சம்பந்தமுள்ள பால்குனமாதத்தில் ஜாதகன் பிறந்தான் என்றேற்படும். கன்னி நவாம்சத்தின் மேலுள்ள 2பங்குகளிலும் ஒன்பது பங்காகப் பிரிக்கப்பட்ட துலா நவாம்சத்தில் ஆறு பங்குகளுக்குள்ளும் பிரச்னகாலத்தில் சந்திரனிருந்தால் சித்திரை 4பாதம், சுவாதி 4பாதம் ஆக 8பாகங்களில் இருப்பதாக வேற்படும். இவற்றுள் சித்திரை சம்பந்தமுள்ள சைத்திரம் என்ற சாந்திரமான மாதத்தில் ஜாத

கன் பிறந்தான் என்றேற்படும். துலா நவாம்சத்தில் மேலுள்ள மூன்று பங்குகளிலும் ஒன்பது பங்காகப் பிரிக்கப்பட்ட விருச்சிக நவாம்சத்தின் ஐந்து நவாம்சங்களுக்குள், பிரச்னகாலத்தில் சந்திரனிருப்பதாக வேற்பட்டால் அப்பொழுது விசாகம், 4பாதம், அனுஷம் 4பாதம் இவைகளிலிருப்பதாக வேற்படும். இவற்றுள் விசாகநக்ஷத்திர சம்பந்தம்பெற்ற வைசாகம் என்ற மாதத்தில் ஜாதகன் பிறந்ததாகவேற்படும். விருச்சிகத்தின் 5நவாம்சங்களுக்குமேலும் தனுஸ்ஸின் 4நவாம்சங்களுக்குள்ளும் பிரச்னகாலத்தில் சந்திரனிருந்தால் அப்பொழுது கேட்டை 4பாதம், மூலம் 4பாதம் ஆக 8பாதங்களில் சந்திரனிருப்பதாக வேற்படும். ஆகவே கேட்டையின் சம்பந்தமுள்ள ஜ்யேஷ்ட மாதத்தில் ஜாதகன் ஜனித்தான் என்றேற்படும். தனுர் நவாம்சத்தின் 5நவாம்சத்திற்கு மேலும், மகரத்தின் 3நவாம்சத்திற்குள்ளும் பிரச்னகாலத்தில் சந்திரனிருந்தால் பூராடம் 4பாதம், உத்திராடம் 4பாதம் ஆக 8பாதங்களிற் சந்திரனிருப்பதாக வேற்படும். அப்பொழுது ஆஷாடம் என்ற சாந்திரமான மாதத்தில் ஜாதகன் பிறந்ததாகவேற்படும். பிறகு மகர நவாம்சத்தில் மீதமுள்ள 6நவாம்சங்களிலும், கும்பநவாம்சத்தில் 2நவாம்சத்திற்குள்ளும் பிரச்னகாலத்தில் சந்திரனிருந்தால் திருவோணம் 4பாதம், அவிட்டம் 4பாதம் ஆக 8பாதங்களில் சந்திரனிருப்பதாக வேற்படும். அப்பொழுது சிராவண மாதத்தில் ஜாதகன் பிறந்ததாக வேற்படும். பிறகு கும்பத்தின்மீதமுள்ள நவாம்சத்திலும், மீனத்தில் 5நவாம்சத்திற்குள்ளும் பிரச்னகாலத்தில் சந்திரனிருந்தால் சதயம் 4பாதம், பூரட்டாதி 4பாதம், உத்திரட்டாதி 4பாதம் ஆக 12பாதங்களில் சந்திரனிருப்பதாக வேற்படும். இவ்விதம் வரும்பொழுது பாத்ரபத மாதத்திற் பிறந்தவன் என்றேற்படும். இவ்விதமே மீனத்தில் மீதமுள்ள 4நவாம்சத்திலும், மேஷத்தில் 8நவாம்சத்திற்குள்ளும் பிரச்னகாலத்தில் சந்திரனிருந்தால் ரேவதீ 4பாதம், அசுவதீ பாதம், பரணி 4பாதம் இவற்றில் சந்திரனிருப்பதாகவேற்படும். அப்பொழுது ஆச்விஜம் என்ற மாதத்தில் ஜாதகன் பிறந்ததாகவேற்படும். ஆகவே சந்திரன் பிரச்னகாலத்தில் எந்த

நவாம்சத்திலிருந்தானே அந்த நவாம்சத்தை 9பங்காகப்பிரித்து அதிலும் எந்தப்பாகத்திலிருப்பதாக வேற்படுமோ அந்த நவாம்சத்திற்கு எந்த நக்ஷத்திரபாதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அந்த நக்ஷத்திர சம்பந்தமுள்ளதான சாந்திரமான மாதத்தில் ஜாதகன் பிறந்தானெனக் கண்டுகொள்ளவேண்டும் என இதனுலுபதேசிக்கப்பட்டது. இவ்விதமே யவனே சுவ ரரும்.

यद्राशिसंज्ञे शीतांशुः प्रश्नकाले नवांशके ।
स्थितस्तद्राशिगः पूर्णो यस्मिन्भवति चद्रमाः ॥

जन्ममासस्सनिर्दिष्टः पुरुषस्य तु पृच्छतः ।
शुक्लान्तसंज्ञिको मासो ज्ञेयो ऽत्र तु विपश्चिता ॥

என்றதா ஹுபதேசித்திருக்கிறுர். பிரச்ன லக்கினத்திற்கு 5, 9 மிடங்களுள் எந்த ஸ்தானம் அக்காலம் அதிகம் வலுவுள்ளதோ அந்த ராசியில் சந்திரனிருக்கும்பொழுது ஜாதகன் பிறந்தான் என்றறியவேண்டும். மேஷம் முதல் மீனம் வரையுள்ள ராசிகள் காலபுருஷனுடைய எந்த அவயவங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அதற்குச் சமமான தனது சரீரத்தில் எந்தப்பாகத்தை ஜாதகன் தொடுகிறுனே அந்த அங்கம் எந்த ராசியாக வருமோ அந்த ராசியில் சந்திரனிருக்கும்பொழுது பிறந்தான் என்றும் தெரிந்துகொள்ளல்தகும். (எ - று)

(அ - கை) ஜாதகன் ஜனித்தகாலத்தில் சந்திரனிருக்கும் ராசியை யறிவதற்கு வேறுவிதமான உபாயத்தை "இந்திர வஜ்ரா" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறுர்.

मू०॥ यावद्गतश्शीतकरो विलग्नाचंद्राद्गदेत्तावति जन्मराशिः ।
मीनोदये मीनयुगं प्रदिष्टं भक्ष्याहृताकाररुतैश्च चिन्त्यम् ॥ ६

(ப - ரை) **विलग्नात्**=பிரச்னகாலத்திய லக்கினத்தினின்றும் **शीतकरः**=சந்திரன் **यावद्गतः**=எவ்வளவு ராசியை யடைந்தானே **चन्द्रात्** = பிரச்னகாலத்தில் சந்திரனிருக்குமிடமிருந்து **तावति**=

அவ்வளவு எண்ணுள்ள ராசியில் **जन्मराशिः**=சந்திரனிருக்கும் ராசியானது (**भवेत्**=ஏற்படும்) **मीनोदये**=மீனலக்கின முதயமாகி சந்திரனும் அதிலிருந்தால் ஜாதகன் பிறந்தகாலத்தில் சந்திரனிருக்கும் ராசியும் **मीनयुगम्**=மீனராசியென்றே **प्रदिष्टम्**=உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை சொல்லிய முறையையொட்டி ஜாதகன் ஜனித்தகாலத்தில் சந்திரனிருக்கும் ராசி வெவ்வேறாக மாறி மாறி வரும்பொழுது **भाद्याहृताकारस्तैश्च**=எந்த ராசியின் சம்பந்தமுள்ள தின்பண்டம் அக்காலம் கொண்டுவரப்படுமோ, அதற்கொப்பான ஆஹாரமுள்ள ராசியாகச் சொல்லவேண்டும். அதாவது: பூனை எலியைக் கொண்டுவருவதைக் கண்டால் அதற்கொப்பான சிங்கராசி என்றும், எருமையைக்கண்டால் விருஷப ராசி என்றும் கண்டு கொள்ளவேண்டும். மேலும் ராசிக்குச் சொல்லியிருப்பதிற் கொப்பான ரூபமுள்ள எந்தப்பிராணியின் சப்தமுண்டாகின்றதோ அந்த ராசியில் சந்திரனிருக்கும்பொழுது பிறந்தவன் என்றும் நிர்ணயிக்கவேண்டும்.

(அ-கை) இவ்விதம் சந்திரனிருக்கும் ராசியை யறிந்த பின்னர் ஜன்மலக்கினத்தை யறிவதற்குபாயத்தை "இந்திரவஜ்ரா" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

मू०॥ होरानवांशप्रतिमं विलग्नं लग्नाद्रवियार्वति च दृगाणे ।
तस्माद्वदेत्तावति वा विलग्नं प्रष्टुः प्रसूताविति शास्त्रमाह ॥ ७ ॥

(ப-ரை) **होरानवांशप्रतिमम्-होरा**=பிரச்ன காலத்திலுதயமான **नवांश**=நவாம்சத்திற்கு **प्रतिमम्**=ஒப்பானதாக **विलग्नम्** = ஜாதகனுடைய ஜன்மலக்கினம் (**भवेत्**=ஆகும் **अथवा**=அல்லது) **लग्नात्**=பிரச்னலக்கினத் திரேஷ்காணத்திலிருந்து **यावतिदृगाणे** = எத்துணையாவது திரேஷ்காணத்தில் **रविः**=சூரியன் (**भवेत्**=இருப்பானோ) **तस्मात्**=சூரியனிருக்கும் அந்தத் திரேஷ்காணத்திலிருந்து **तावति**=ஜன்மலக்கினத் திரேஷ்காணத்திற்கும் சூரியனிருக்கும் திரேஷ்காணத்திற்கும் மத்தியிலுள்ள திரேஷ்காணங்களின் எண் எவ்வளவோ அவ்வளவு எண்ணுள்ள ராசியில் **प्रष्टुः**=பிரச்னம் செய்கின்றவனுடைய **प्रसूतौ**=ஜன்மகாலத்தில் **विलग्नम्**=லக்

கினத்தை **वदेत्**=சொல்லவேண்டும் **इति**=என்று **शास्त्रम्**=சாஸ்திரமானது **आह**=சொல்லுகின்றது.

(தா-ம்) பிரச்னகாலத்தில் எந்தலக்கினத்தில் எந்த நவாம்சமுதயமாகுமோ, அதாவது: அது எந்த ராசியைச்சேர்ந்ததாகவாகுமோ அந்த ராசியே ஜாதகனுடைய ஜன்ம லக்கினமாகவாகும். அல்லது பிரச்ன லக்கினத்தி லுதயமடைந்தத் திரேஷ்காணம் முதல் எத்துணையாவது திரேஷ்காணத்தில் சூரியன் பிரச்னகாலத்திலிருப்பானோ அந்தத் திரேஷ்காண ராசியினின்றும் அவ்வளவு எண்ணுள்ள ராசியானது ஜாதகனுடைய ஜன்ம லக்கினமென்றறியவேண்டும். பிரச்ன லக்கினத்தி லுதயமடைந்த திரேஷ்காணம் முதல், சூரியனிருக்கும் திரேஷ்காணம் வரையுள்ள திரேஷ்காணங்களின் எண் 12 திரேஷ்காணங்களுக்குமேலிருந்தால் அந்தத்திரேஷ்காண எண்களை 12னால் வகுத்து மீதத் திரேஷ்காண எண்களை எடுத்துக் கொள்ளவேண்டும். மேற்கூறிய திரேஷ்காணங்களின் எண் 24-க்குமேல் வருமானால் 24னால் வகுத்து மீதமுள்ள எண்ணை எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதமே மற்றசோதிடக் கிரந்தங்களிலும்.

3140

पृच्छालग्ननवांशस्य योराशिस्संज्ञया समः ।
तस्मिन् लग्नगते राशौ वक्तव्यं जन्म पृच्छतः ॥

यावत्संख्ये गतो लग्नाद्दृक्काणे दिनकृत्ततः ॥
तावत्संख्ये लग्नराशौ प्रष्टुर्जन्म विनिर्दिशेत् ॥

என்றத்ரி லுபதேசிக்கப்பட்டிருக்கின்றது. (எ - று)

(அ - கை) ஜாதகனுடைய ஜன்ம லக்கினத்தை யறிவதற்கு வேறுவிதமான உபாயத்தை "இந்திர வஜ்ரா" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

मू०॥ जन्मादिशेल्लग्नगते सवीर्ये च्छायाङ्गुलघ्नाऽर्कहतावशिष्टम् ।
आसीनसुप्तोत्थिततिष्ठतां भं जायासुखाऽऽज्ञोदयगं प्रदिष्टम् ॥ ८

(ப - ரை) लग्नगते=பிரச்ன லக்கினத்திலிருக்கும் கிரஹத்தையோ सवीर्ये=பிரச்ன லக்கினத்தில் அனேகம் கிரஹங்களிருக்குமானல் அவற்றுள் வலுவுள்ளக் கிரஹத்தையோ (எடுத்துக்கொண்டு அந்தக் கிரஹம் எத்துணையாவது பாகத்திலிருக்கின்றதோ அந்தப்பாகத்தைக்கலைகளாக்கிக்கொண்டு) छायाङ्गुलघ्नार्कहृते छायाङ्गुल = அக்காலம் ஜலத்தினருகில் 12 அங்குல அளவுள்ள துரும்பை எடுத்து நெருத்திக் கீழுள்ள பாகம் போக மேல் நெருத்திய பாகத்தின் நிழல் கீழுள்ள பாகத்தின் முடிவில் சரியாக வருவதைக் கண்டுகொள்ள வேண்டும். இவ்விதம் வருமிடத்து மேலுள்ளபாகத்தின் அளவை அளந்து கொள்ளவேண்டும். இவ்விதம் வரும் அங்குலத்தால் घ्न=முன் கலைகளாக்கி வந்ததைப் பெருக்கி अर्कहृते=12ஞல் வகுத்ததில் अवशिष्टम्=ஈவுபோக மீதம் வருவது எதுவோ तस्मिन् जन्म=அதில் ஜாதகனுடைய பிறவியை அறியவேண்டும். तथा = அவ்விதமே आसीनसुप्तोत्थितस्थिताम्— आसीन=பிரச்னம் செய்யும் சமயத்தில் உட்கார்ந்து கொண்டோ, सुप्त=படுத்துக்கொண்டோ, उत्थित=ஆஸனத்தினின்றும் எழுந்து நின்று கொண்டோ (प्रश्नकृताम्=பிரச்னம் செய்கின்றவர்களுக்கு क्रमेण=முறையே) जायासुखाज्ञोदयगम्=7, 4, 10, 1 இவ்விடங்களையடைந்த भम्=ராசியானது (जन्मलग्नम्=ஜன்மலக்கினமாக) प्रदिष्टम्=சொல்லப்பட்டிருக்கிறது.

(தா - ம்) பிரச்ன லக்கினத்தில் ஒரு கிரஹ மிருந்தால் அந்தக்கிரஹமிருக்கும் ராசி பாகத்தைக் கலைகளாக்கிக் கொள்ள வேண்டும். பிரச்ன லக்கினத்தில் அனேகம் கிரஹங்களிருந்தால் அவற்றுள் எது அதிக வலுவுள்ளதோ அந்தக்கிரஹமிருக்கும் பாகத்தைக் கலைகளாக்கிக் கொள்ளவேண்டும். பிறகு 12 அங்குலமளவுள்ள ஒரு துரும்பை எடுத்து அத்துரும்பை ஜலமுள்ள விடத்திற்குச் சமீபத்தில் போட்டு ஒரு பாகத்தை மடித்து உயரத்தூக்கி, மேல்தூக்கிய பாகத்தின் நிழல் கீழிருக்கும்பாகத்திற்கு நேராக வருவதைக்கண்டு நேராக நெருத்திய பாகத்தை அளந்து இவ்வளவு அங்குல மிருக்கின்றதென்று கண்டு கொள்ளவேண்டும். பிறகு பிரச்ன காலத்தில் கிரஹ மிருக்கும் பாகத்தின் கலைகளை இங்கு சொல்லிய அங்குல எண்க

ளால் பெருக்கி, அதனின்றும் கிடைக்கும் மொத்த எண்களை 12ஞல் வகுத்துவரும் ஈவுபோகமீதம்வரும்தொகை எவ்வளவோ மேஷம் முதல் அவ்வளவு எண்ணுள்ள ராசியில் ஜாதகன் ஜனித்தான் எனக்கண்டு கொள்ளவேண்டும். மேலும் ஜாதகன் பிரச்னம் செய்யும் காலத்தில் உட்கார்ந்துகொண்டு பிரச்னம் செய்தால் பிரச்ன லக்கினத்திற்கு 7மிடம் எதுவோ அதுவே அவன் பிறந்த ராசியென்றும், படுத்துக்கொண்டு பிரச்னம் செய்தால் பிரச்ன லக்கினத்திற்கு 4-மிடம் எதுவோ அதுவே அவன் பிறந்த ராசி என்றும், ஆஸனத்தினின்றும் எழுந்து பிரச்னம் செய்தால் பிரச்னலக்கினத்திற்கு 10-மிடம் எதுவோ அதுவே அவன் பிறந்த ராசி என்றும், வந்தது முதல் நின்றுகொண்டே பிரச்னம் செய்தால் பிரச்ன லக்கினம் எதுவோஅதுவே அவன் பிறந்த ராசி என்றும் கண்டு சொல்ல வேண்டும். (எ - று.)

குறிப்பு:-இந்தச்சுலோகத்தில் ஆசிரியர் ஸுப்த என்று சொல்லி இருக்கிருராயினும், தூங்கும்பொழுது பிரச்னம் நிகழாதாகையால் படுத்துக்கொண்டு பிரச்னம் செய்தால் என்று பொருள் கொள்ளப்பட்டது. उत्थित என்ற பதத்திற்கும் तिष्ठन् என்ற பதத்திற்கும் ஒருவாறு பொருள் ஒன்ருக ஏற்படினும் उत्थित என்ற பதத்திற்கு முதலில் ஆஸனத்திலுட்கார்ந்திருந்து பின்னர் எழுந்து பிரச்னம் செய்தாலென்றும், तिष्ठन् என்ற பதத்திற்கு வந்தது முதல் நின்றுகொண்டே பிரச்னம் செய்தாலென்றும் பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

(அ - கை) நஷ்ட ஜாதகம் கண்டு பிடிப்பதில் இதுவரை கூறியதைவிட வேருன முறையை யுபதேசிக்கிருர். அதாவது:— பிரச்ன காலத்திய லக்கினம் இன்னதென வறிந்துகொண்டு, லக்கினத்திற் சென்ற பாகங்களைக் கலைகளாக்கிக் கொண்டு அவற்றைப் பெருக்கும் முறையைச் "சார்த்தூல விக்ரீடிதம்" என்ற விருத்தத்தா லுபதேசிக்கிருர்.

मू०॥ गोसिह्मौ जितुमाष्ट्यौ क्रियतुले कन्यामृगौ च क्रमात्
संवर्ग्या दशकाष्टसप्तविषयैश्शेषास्स्वसंख्यागुणाः ।

जीवाऽऽराऽऽस्फुजिदैन्दवाः प्रथमवच्छेषाः ग्रहास्सौम्यव
द्राशीनां नियतो विधिर्ग्रहयुतैः कार्या च तद्गुणा ॥ ९ ॥

(ப - ரை) **गोसिंहौ**=விருஷபம் சிங்கம் இவைகளும் **जितुमाष्टमौ**=மிதுனம் விருச்சிகம் இவைகளும் **क्रियतुले**=மேஷம், துலாம் இவைகளும் **कन्यामृगौच**=கன்னி, மகரம் இவைகளும் **क्रमात्**=முறையே **दशकाष्टसप्तविषयैः**=10, 8, 7, 5 இவைகளால் **संवर्ग्याः**=பெருக்கத்தக்கன. **शेषाः**=மீதமுள்ள ராசிகள் **स्वसंख्यागुणाः**=அந்தந்த ராசிகள் மேஷம் முதல் எத்துணையாவது எண்ணுள்ளன வாகவாகின்றனவோ அவற்றால் **संख्याः** = பெருக்கத் தக்கன (**प्रश्नलग्नगाः**=பிரச்ன லக்கினத்திலிருக்கின்ற) **जीवारास्फुजिदैन्दवाः**= குரு, செவ்வாய், சுக்கிரன், புதன் இவர்கள் **प्रथमवत्**=முதலிற் சொல்லியபடி முறையே; 10-னாலும், 8-னாலும், 7-னாலும் 5-னாலும் **शेषाः**=மீதமுள்ள **ग्रहाः**கிரஹங்கள் **सौम्यवत्** = புதனுக்குச் சொல்லியதுபோல 5-னாலும் **संवर्ग्याः**-பெருக்கத்தக்கன. **राशीनाम्** ராசிகளுக்குச்சொல்லிய **विधिः**=விதியானது **नियतः**=நிச்சயமானது **ग्रहयुतैः**=ராசிகள் கிரஹங்களுடன் சேர்ந்திருககும்பொழுது **तद्गुणाच्च**=கிரஹங்களுக்குச் சொல்லியபடி பெருக்கலும் **कार्या**= செய்யத்தகுந்தது.

(தா - ம்) பிரச்ன காலத்தி லுதயமான ராசியில் எத்துணை பாகங்கள் சென்றிருக்கின்றனவோ அப்பாகங்களைக் கலைகளாக் கிக்கொள்ளவேண்டும். பிறகு பிரச்ன லக்கினம், விருஷபம், சிங்கம் இவைகளானால் லக்கினத்திற் சென்ற கலைகளை 10னாலும் மிதுனம் விருச்சிகம் இவைகளானால் 8 னாலும், மேஷம், துலாம் இவைகளானால் 7 னாலும், கன்னி, மகரம் இவைகளானால் 5 னாலும் பெருக்கவேண்டும். மீதமுள்ள ராசிகள் விஷயத்திலோ வெனில் அந்தந்த ராசிகள் மேஷம்முதல் எத்துணையாவது எண் ணுள்ளதாக வாகின்றனவோ அவ்வெண்ணால் பெருக்கவேண்டும். பிறகு பிரச்ன லக்கினத்தில் குருவிருந்தால் 10 னாலும், செவ்வா யிருந்தால் 8 னாலும், சுக்கிரனிருந்தால் 7 னாலும், புதனிருந்தால் 5 னாலும் முன் பெருக்கப்பட்ட கலைகளைத் திரும்பவும் பெருக்க

வேண்டும். மீதமுள்ள சந்திரன், சனி, சூரியன் இந்தக் கிரஹங்கள் பிரச்ன லக்கினத்திலிருந்தால் புதனுக்குச் சொல்லிய ஐந்திஞல் பெருக்கவேண்டும். ஆனல் பிரச்ன காலத்தி லுதயமான ராசியின் கலைகளுக்குச் சொல்லிய முதல் பெருக்கல் எப்பொழுதும் சம்பவிக்குமென்றும், லக்கினத்தில் கிரஹமிருந்தால் தான் கிரஹங்களுக்குச் சொல்லிய எண்களால் திரும்பவும் பெருக்கல் சம்பவிக்குமென்றும் கண்டுகொள்ள வேண்டும்.

ராசிகளில் உதயமான கலைகளைப் பெருக்கும் எண்கள்.

ராசி	மே	வி	மிது	கட	சி	கன்	து	விரு	தனு	மக	கும்	மீன
எண்	7	10	8	4	10	5	7	8	9	5	11	12

கிரஹங்களிருப்பதன் மூலம் கலைகளைப் பெருக்கும் எண்.

கிரஹம்	சூரி	சந்திரன்	செவ்வாய்	புதன்	குரு	சுக்கிரன்	சனி
எண்	5	5	8	5	10	7	5

லக்கினத்தில் அனேகம் கிரகங்களிருக்குமாஞல் ஒவ்வொரு கிரஹத்தின் எண்களாலும் முற்கூறிய கலைகளைப் பெருக்கவேண்டும். இவ்விதம் பெருக்கிவந்த எண்ணை ஓரிடத்தில் எழுதிக் கொள்ளவேண்டும். (எ - று.)

(அ - கை) இவ்விதம் செய்தபிறகு நக்ஷத்திரங்களைக் கண்டறியும் முறையை "வஸந்த திலகம்" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிருர்:—

सू०॥ सप्ताहतं त्रिघनभाजितशेषमृक्षं
दत्वाऽथवा नव विशोध्य नवाऽथवाऽस्मात् ।
एवं कलत्रसहजात्मजशत्रुभेभ्यः
प्रष्टुर्वदेदुदयराशिवशेन तेषाम् ॥ १० ॥

(ப - ரை) (ग्रहराशिसंख्याभिहतमुदितकलाङ्कम् = முன் சுலோகத்திற் சொல்லிய கிரஹங்களின் எண், ராசிகளின் எண் இவற்

ருல் பெருக்கப்பட்ட பிரச்ன லக்கினத்திலுதயமான கலைகளின் எண்ணை) **सप्ताहतम्**=ஏழினுனும் பெருக்கப்பட்டதாகச் செய்து கொண்டு **नव, दत्वा**=பிரச்ன லக்கினத்தில் முதல் திரேஷ்காண முதயமானுல் இதுவரைப் பெருக்கிவந்த தொகையுடன் 9ஐ கூட்டிக்கொண்டும், **अथवा**=அல்லது **अस्मात्, नव, विशोध्य**=பிரச்ன லக்கினத்தில் இரண்டாவது திரேஷ்காண முதயமானுல் முன் பெருக்கிவந்த தொகையினின்றும் 9 ஐக்கழித்துக்கொண்டும் **न, वा**=பிரச்ன லக்கினத்தில் மூன்ருவது திரேஷ்காண முதயமானுல் 9 ஐக்கூட்டிக்கொள்ளாமலும், கழித்துக்கொள்ளாமலும் **त्रिघन-भाजितम्** 27 ஞல் வகுக்கப்பட்டதாக (**कुर्यात्** = செய்யவேண்டும்) **शेषम्**=ஈவுபோக மீதமுள்ளதை **ऋक्षम्**=அசுவதீ முதல் ஜாதகனுடைய ஜன்ம நக்ஷத்திரமாக **विंद्यात्** = அறியவேண்டும். **एवम्**=இவ்விதமே **कलत्रसहजात्मजशत्रुभेभ्यः**=களத்திரம், சஹோதரன், புத்திரன், சத்துரு, இந்த ராசிகளினின்றும் **प्रष्टुः**=பிரச்னம் செய்பவனுடைய **उदयराशिवशेन**=உதயராசியைக்கொண்டு **तेषाम्**=களத்திரம் முதலியவர்களுடைய **ऋक्षम्**=நக்ஷத்திரமானது **ज्ञेयम्**=அறியத்தகுந்தது.

(தா - ம்) முன் சுலோகத்திற் சொல்லிய பிரச்ன லக்கினத்திலுதயமானபாகங்களின் கலைகளின் எண்ணை பிரச்ன லக்கினம், அதிலிருக்கும் கிரஹம் இவற்றிற்குச் சொல்லிய பெருக்கும் தொகையால் பெருக்கிய பிறகு அம்மொத்தத் தொகையை மருபடியும் 7ஞற் பெருக்கவேண்டும். இவ்விதம் பெருக்கிக்கொண்டு பிரச்ன காலத்தில் லக்கினத்தில் முதல் திரேஷ்காண முதயமானுல் முன் பெருக்கிவந்த மொத்தத் தொகையுடன் 9ஐக் கூட்டிக் கொள்ளவேண்டும். பிரச்ன லக்கினத்தில் இரண்டாவது திரேஷ்காண முதயமானுல் முன் பெருக்கிவந்த மொத்தத் தொகையினின்றும் 9 ஐக்கழித்துவிடவேண்டும். பிரச்ன லக்கினத்தில் மூன்ருவது திரேஷ்காண முதயமானுல் அம்மொத்தத் தொகையுடன் 9 ஐக் கூட்டவோ, கழிக்கவோ வேண்டுவதில்லை. இவ்விதம் செய்தபிறகு அம்மொத்தத் தொகையை 27 ஞல் வகுத்து ஈவுபோக மீதம் வரும் எண் எவ்வளவோ அவ்வெண் அசுவதீ முதல் எத்துணையாவது நக்ஷத்திரத்தில் முடிவாகுமோ அந்த

நக்ஷத்திரமே ஜாதகனுடைய ஜன்ம நக்ஷத்திரமெனக் கண்டு கொள்ள வேண்டும். இவ்விதம் दत्त्वाथवा என்றதற்குப் பட்டோத்பலரின் கருத்துப்படிப் பொருள் செய்தோம். दत्त्वाथवा என்றதற்கு வேறு சிலர், பிரச்ன லக்கினம் சரராசியானால் 9 ஐக் கூட்டவேண்டும் என்றும், ஸ்திரராசியானால் 9 ஐக்கழிக்க வேண்டும் என்றும், உபயராசியானால் 9 ஐக் கூட்டவோ, கழிக்கவோ வேண்டுவதில்லை என்றும் பொருள் கூறுகின்றனர். त्रिघ-नभाजितशेषभृद्दं दत्त्वाऽथवा नव विशोध्य नवाऽथवाऽस्मात् என்றதற்கு வேறுவிதமாகச் சிலர் பொருள் செய்கின்றனர். அதாவது: முன் சுலோகத்திற் சொல்லிய முறைப்படி ராசி, கிரஹம் இவற்றிற்குரிய எண்ணினால் பிரச்ன லக்கினத்திலுதயமான பாகங்களின் எண்ணைப் பெருக்கிய பின் அதனின்றும் கிடைத்த எண்ணை 7 னாலும் பெருக்கி 27னால் வகுத்து ஈவு போக மீதமான தொகையுடன் லக்கினத்திலுதயமான திரேஷ்காணத்தை யனுசரித்தோ, சரம், ஸ்திரம், உபயம் என்ற ராசிப் பிரிவினையை யனுசரித்தோ 9 ஐக் கூட்டிக் கொள்வதையோ, கழித்துக் கொள்வதையோ, அல்லது ஒன்றும் செய்யாதிருத்தலையோ செய்துகொண்டு அதனின்றும் வரும் தொகை அச்வதி முதல் எத்துணையாவது நக்ஷத்திரத்தில் முடிவடையுமோ அந்த நக்ஷத்திரமே ஜாதகனுடைய ஜன்மநக்ஷத்திரமாகும் என்பதாம்.

பிரச்ன காலத்திலுதயமான ராசியைக் கொண்டே பிரச்னம் செய்கின்றவனுடைய களத்திரம், சஹோதரன், புத்திரன், சத்துரு, இவர்களின் ஜன்ம நக்ஷத்திரத்தை யறியவேண்டும். அம்முறை பின்வருமாறு—பிரச்னம் செய்பவன் தனது பத்தினியின் ஜன்ம நக்ஷத்திரத்தைக் கேழ்ப்பானாயின் பிரச்ன காலத்திலுதயமான ராசியுடன் 6 ராசிகளைக் கூட்டிக்கொள்ளவேண்டும். சஹோதர ஜன்ம நக்ஷத்திரத்தைக் கேட்டால் உதயமான ராசியுடன் 2 ஐக் கூட்டிக்கொள்ளவேண்டும். புத்திரனின் ஜன்ம நக்ஷத்திரத்தைக் கேட்டால் உதயமான ராசியுடன் 4 ஐக் கூட்டிக்கொள்ளவேண்டும். சத்துருவின் ஜன்மநக்ஷத்திரத்தைக்கேட்டால் உதயமான ராசியுடன் 5ஐக் கூட்டிக் கொள்ளவேண்டும். இவ்விதமே எந்தெந்தப் பாவங்களைப் பற்றிப் பிரச்னம்

செய்கின்றனோ அதற்குத் தக்கபடி சங்கியையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். பிறகு பிரச்ன ராசியில் சென்ற பாகங் களையும், முன் கூட்டிய ராசியின் பாகங்களையும் கலைகளாக் கிக்கொண்டு பிரச்ன லக்கின ராசியுடன் கூட்டிக்கொண்ட ராசிகளுள் எது கடை ராசியோ அதற்கு எந்த எண் பெருக் கும் எண்ணாக 9 - வது சுலோகத்தால் சொல்லப் பட்டிருக் கிறதோ அந்த எண்ணினால் பெருக்கவேண்டும். கூட்டிக் கொண்ட ராசிகளுள் கடைசி ராசியில் கிரஹமிருந்தால் முன் ராசி ஸங்கியையால் பெருக்கிவந்த மொத்தத் தொகையையே கிரஹங்களுக்குக் கூறிய ஸங்கியையாலும் பெருக்கவேண்டும். அதாவது: பிரச்னம் செய்பவன் பத்தினியின் நக்ஷத்திரத்தை யறிய விரும்பி மேஷ லக்கினம் 7-வது பாகத்தில் பிரச்னம் செய் தான் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது மேஷ ராசி யுடன் விருஷபம் முதல் துலாம் முடிவாக வுள்ள 6 ராசிகளைச் சேர்த்துக்கொண்டு மேஷத்திற் சென்ற 7 பாகங்களையும், விரு ஷபம் முதலுள்ள 6 ராசிகளின் பாகங்களையும் கலைகளாக்கிக் கொண்டு கூட்டியராசிகளுள் கடைசிராசியான துலாத்திற்குச் சொல்லிய 7 என்ற எண்ணால் மேற்கூறிய கலைகளை பெருக்கிக் கொண்டு 9, 10-வது சுலோகங்களிற் சொல்லிய மற்ற விதிகளை யெல்லாம் செய்து முடித்தால் பத்தினியின் ஜன்ம நக்ஷத்திரமறி யப்படும். இவ்விதமே மற்ற பாவங்கள் விஷயத்திலும் கண்டறிய வேண்டும்.

(அ - கை) வருஷம் முதலியவற்றை யறிவதற் குபாயத்தை "வஸந்த திலகம்" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

मू०॥ वर्षर्तुमासतिथयो द्युनिशं ह्युडूनि
वेलोदयर्क्षमपि भागविकल्पनात्स्युः ।
भूयो दशादिगुणितास्स्वविकल्पभक्ता
वर्षादयो नवकदानविशोधनाभ्याम् ॥ ११ ॥

(ப - ரை) वर्षर्तुमासतिथयः = வருஷம், ருது, மாதம், திதி இவைகளும், द्युनिशम्=பகல் இரவு இவைகளும் उडूनि=நக்ஷத்தி

ரங்களும் **वेलोदयर्क्षमपि**-**वेला**=ஜனன காலம், **उदयर्क्षम्**=ஜனனமான ராசி இவைகளும் **भागविकल्पनात्** = (பிரச்ன காலத்திலுதயமான ராசியின் பாகங்களைக் கலைகளாக்கிக்கொண்டு, அந்தந்த ராசிக்கு 9-வது சுலோகத்தாற் சொல்லிய எண்ணினால் முதலில் அந்தக் கலைகளை பெருக்கிக்கொண்டு, பிரச்ன ராசியில் கிரஹமிருந்தால் அதனால் முன் பெருக்கிவந்த தொகையை மறுபடியும் பெருக்க வேண்டும்) அந்த மொத்த எண்களைப் பங்குபிரித்தல் மூலம் **स्युः**= ஏற்படுகின்றன. அதாவது: **भूयः**=(ராசிக்குச் சொல்லிய எண் கிரஹங்களுக்குச் சொல்லிய எண் இவற்றால் கலைகளைப் பெருக்கி நான்கு இடத்தில் பிரித்து எழுதிக்கொண்ட பிறகு) மறுபடியும் **दशादिगुणिताः**=(முறையே அந்தக்கலைகளை) 10, 8, 7, 5 இவற்றால் பெருக்கப்பட்டவைகளாக (**कृत्वा**=செய்து) **नवकदानविशोधनाभ्याम्** இவ்விதம் பெருக்கிவந்தகலைகளுடன் முதல் திரேஷ்காணமானால் 9 ஐச் சேர்த்தல், இரண்டாவது திரேஷ்காணமானால் 9 ஐக்கழித்தல், 3-வது திரேஷ்காணமானால் கூட்டல் கழித்தல் செய்யாமை ஆகிய இவைகளைச் செய்து **स्वविकल्पभक्ता यदि**=வருஷம் முதலியவற்றின் எண்களால்வகுக்கப்படுமேயானால் **वर्षादयः**=பிரச்னம்செய்கின்றவனுடைய வருஷம் முதலியன (**भवन्ति**=ஏற்படுகின்றன)

(தா - ம்) பிரச்ன லக்கினத்திலுதயமான பாகங்களைக் கலைகளாக்கி 9-வது சுலோகத்திற் சொல்லியபடி ராசிக்குரிய எண்களால் முதலில் பெருக்க வேண்டும். பிரச்ன ராசியில் கிரஹமிருந்தால் 9-வது சுலோகத்திலேயே கிரஹங்களுக்குச் சொல்லிய எண்களால் மறுபடியும் அம்மொத்தக் கலைகளைப் பெருக்கவேண்டும். பிறகு அம்மொத்தக்கலைகளை 4 வரிசைகளிற் தனித்தனியே எழுதிக் கொள்ள வேண்டும். பிறகு நான்கு வரிசைகளுள் முதல் வரிசையில் எழுதப்பட்ட கலைகளை 10ஆலும், இரண்டாவதுவரிசையிலுள்ள கலைகளை 8ஆலும், மூன்றாவதுவரிசையிலுள்ள கலைகளை 7ஆலும், 4வது வரிசையிலுள்ளகலைகளை 5ஆலும் முறையேபெருக்கவேண்டும். இவ்விதம்செய்தபிறகு லக்கினத்தில்முதல் திரேஷ்காண முதயமானால் அம்மொத்தத் தொகையில் 9 ஐக் கூட்டிக்கொள்ள வேண்டும். இரண்டாவது திரேஷ்காணமானால் 9 ஐக்கழிக்கவேண்டும். மூன்றாவது திரேஷ்காணமானால் ஒன்

றும் செய்யவேண்டாம். பிறகு இனிவரும் 12-வது சுலோகத்திற் சொல்லப்படும் வருஷம் முதலியவற்றின் எண்களால் மேற்கூறிய கலைகளை வகுத்தால் ஈவுபோக மீதம் வருவது பிரச்னம் செய்கின்றவனின் வருஷம், மாதம் முதலியவைகளாகவாகும்.

(அ - கை) முந்திய சுலோகத்தால் ராசியின் எண்ணினாலும், கிரஹங்களுக்குச் சொல்லிய எண்ணினாலும் ராசியில் சென்ற பாகங்களின் கலைகளை பெருக்கிய பிறகு 4 இடத்தில் தனித்தனியே எழுதிக்கொண்டு 10, 8, 7, 5 இவற்றால் முறையே பெருக்கி, உதயமான திரேஷ்காணத்தை யனுசரித்து 9 ஐக் கூட்டவோ கழிக்கவோ செய்து வர்ஷாதிகளின் எண்ணினால் வகுத்தால் ஈவுபோக மீதம் வருவது வருஷம் முதலியனவாகும் என்று சொல்லப்பட்டது. ஆனால் எந்த யிடத்தில் எழுதிய கலைகளை வர்ஷாதிகளின் எண்ணினால் வகுக்கவேண்டும் என்பது உபதேசிக்கப்படாததால் அதை "அனுஷ்டுப்" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

ஸூ०॥ विज्ञेया दशकेष्वब्दा ऋतुमासास्तथैव च।
अष्टकेष्वपि मासार्द्धास्तिथयश्च तथा स्मृताः ॥ १२ ॥

(ப - ரை) दशकेषु=நான்கு இடங்களில் தனித்தனியே எழுதிக்கொள்ளப்பட்ட கலைகளுள் முதலில் எழுதப்பட்ட கலைகளை 10 னால் பெருக்கவேண்டு மாதலால் அவ்விதம் பெருக்கிவந்த முதல் ஸ்தானத்திலுள்ள கலைகளில் अब्दाः=வருஷங்களும், तथैव= அவ்விதமே ऋतुमासाः=ருது, மாதம் இவைகளும் विज्ञेयाः=அறியத்தக்கன. अष्टकेषु=இரண்டாவது பத்தியில் எழுதிக்கொள்ளப்பட்ட கலைகளை 8 னால் பெருக்கவேண்டு மாதலால் அவ்விதம் பெருக்கிவந்தகலைகளில் मासार्द्धाः=மாதங்களின் பகுதியான பக்ஷங்களும், तिथयश्च=திதிகளும் स्मृताः=சொல்லப்பட்டிருக்கின்றன.

(தா-ம்) 11-வது சுலோகத்தில் स्वविकल्पभक्तावर्षादयः என்று கூறியதை இந்தச் சுலோகத்தால் தெளிவுபடுத்துகிறார். இதுவரைக் கூறியபடி பிரச்ன ராசியிலுதயமான பாகங்களைக் கலைகளாக்கிக்கொண்டு ராசிக்குச் சொல்லியபடியும், கிரஹமிருந்தால் கிரஹத்திற்குச் சொல்லியபடியும் பெருக்கி வந்த மொத்தக்

தோகையை நான்கு வரிசையாக எழுதிக்கொண்டு முதல் வரிசையில் எழுதப்பட்டிருக்கின்ற கலைகளை 10 ஞலும், இரண்டாம் வரிசையில் எழுதப்பட்டிருக்கின்ற கலைகளை 8 ஞலும், 3-வது வரிசையில் எழுதப்பட்டிருக்கின்ற கலைகளை 7 ஞலும், 4-வது வரிசையில் எழுதப்பட்டிருக்கின்ற கலைகளை 5 ஞலும் பெருக்கி லக்கினத்திலுதயமான திரேஷ்காணத்திற்குத் தக்கபடி 9 ஐக் கூட்டிக்கொள்வதையோ, கழித்துக்கொள்வதையோ, ஒன்றும் செய்யாதிருத்தலையோ ஒவ்வொரு வரிசையிலும் செய்யவேண்டும். பிறகு முதல் வரிசையிலுள்ளதும் 10 ஞல் பெருக்கப்பட்டதுமான கலைகளை வருஷம் ருது மாதம் இவற்றின் எண்ணிஞல் வகுத்து வருஷம், ருது, மாதம் இவற்றை யறியவேண்டும். அதாவது:—முதல் வரிசையிலுள்ள கலைகளை 10 ஞல் பெருக்கி 9 ஐக் கூட்டிக்கொள்ளுதல் முதலியவற்றைச் செய்த பிறகு 120 ஞல் வகுத்து ஈவுபோக மீதம் எவ்வளவு வருகின்றதோ பிரபவமுதல் அவ்வெண்ணுள்ள வருஷத்தில் ஜாதகன் ஜனித்தான் என்று அறியவேண்டும். இவ்விதமே முதல் வரிசையிலுள்ள கலைகளை 10 ஞல் பெருக்கி 9 ஐக்கூட்டிக்கொள்வது முதலியவற்றைச் செய்தபிறகு ருதுவின் சங்கியையான 6 ஞல் வகுத்தால் ஈவுபோக மீதம் எவ்வளவு வருமோ சிசிரம் முதல் அத்துணையாவது எண்ணுள்ள ருதுவில் ஜாதகன் ஜனித்தான் என்று கண்டுகொள்ளவேண்டும். இவ்விதமே முதல் வரிசையிலுள்ள கலைகளை 10 ஞல் பெருக்கி 9ஐக் கூட்டிக்கொள்வது முதலியவற்றைச் செய்த பிறகு 6ஞல் வகுத்து ஈவுபோக மீதம் வரும் எண்ணை 2 ஞல் வகுக்கவேண்டும். இவ்விதம் வகுத்ததில் 1 மிச்சமாஞல் முன் அறியப்பட்ட ருதுவின் முதல் மாதத்தில் ஜனித்தான் என்றும், ஒன்றும் மிச்சமில்லாவிடில் ருதுவின் பின்னுள்ள மாதத்தில் ஜனித்தான் என்றும் மாதத்தை யறியவேண்டும்.

இரண்டாவது வரிசையில் எழுதப்பட்ட கலைகளை பக்ஷத்தின் சங்கியை, திதிகளின் சங்கியை இவற்ருல் வகுத்து சுக்கில பக்ஷம், கிருஷ்ண பக்ஷம் இவற்றையும், பிரதமை முதலிய திதிகளையும் கண்டறியவேண்டும். அதாவது:—இரண்டாவது வரிசையில் எழுதப்பட்ட கலைகளை 8 ஞல் பெருக்கி 9ஐக் கூட்டிக்

கொள்ளுதல் முதலியவற்றைச் செய்தபிறகு 2 ல் வகுத்து ஒன்று மிச்சம் வருமானல் சுக்கிலபக்ஷத்தில் பிறந்தவனென்றும் ஒன்றும் மிச்சம் வராவிடில் கிருஷ்ண பக்ஷத்தில் பிறந்தவனென்றும், கண்டுகொள்ளவேண்டும். இவ்விதமே மேற் கூறியபடியெல்லாம் செய்தபிறகு 15 ல் வகுத்து ஈவுபோக மீதம் எவ்வளவு வருகின்றதோ பிரதமை முதல் அவ்வளவு எண்ணுள்ள திதியில் பிறந்தான் என்று கண்டுகொள்ளவேண்டும்.

(அ - கை) பகல் இரவு, நக்ஷத்திரம் இவைகளை யறிவதற்குபாயத்தை "அனுஷ்டுப்" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

मू०॥ दिवारात्रिप्रसूतिं च नक्षत्रानयनं तथा ।
सप्तकेष्वपि वर्गेषु नित्यमेवोपलक्षयेत् ॥ १३ ॥

(ப - ரை) **सप्तकेषु**=(மூன்றுவது வரிசையில் எழுதப்பட்ட கலைகளை ஏழினல் பெருக்கவேண்டுமாதலால்) அவ்விதம் ஏழினல் பெருக்கப்பட்ட **वर्गेषु**=மொத்தத் தொகையில் **दिवारात्रिप्रसूतिम्**=பகல் இரவு இவற்றில் பிறவியையும் **तथा**= அவ்விதமே **नक्षत्रानयनम्**=நக்ஷத்திரங்களைக் கண்டறிவதையும் **नित्यमेव**—எப்பொழுதுமே **उपलक्षयेत्**=கண்டறியவேண்டும்.

(தா - ம்) மூன்றுவது வரிசையில் எழுதப்பட்ட கலைகளை 7 ல் பெருக்கி 9ஐக் கூட்டிக்கொள்வது முதலியவற்றைச் செய்துகொண்ட பிறகு 2 ல் வகுத்து ஒன்று மிச்சமானல் பகலில் பிறந்தவனென்றும், ஒன்றும் மிச்சமில்லாவிடில் இரவில் பிறந்தவனென்றும் கண்டுகொள்ளவேண்டும். இவ்விதமே 7 ல் பெருக்கிய தொகையை 27 ல் வகுத்து ஈவுபோக மீதமுள்ள எண் எவ்வளவோ, அவ்வெண்ணுள்ள அசுவதி முதலிய நக்ஷத்திரங்களில் ஜனித்தான் என்று கண்டுகொள்ளவேண்டும் (எ-று.)

(அ - கை) ஜாதகன் பிறந்த நாழிகை, ஜன்ம லக்கினம், ஹோரை, நவாம்சம் இவற்றை யறிவதற்குபாயத்தை "அனுஷ்டுப்" என்ற விருத்தத்தா லுபதேசிக்கிறார்.

मू० ॥ वेलामथविलग्नं च होरांशकमेव च ।
पञ्चकेषु विजानीयान्नष्टजातकसिद्धये ॥ १४ ॥

(ப-ரை.) पञ्चकेषु=4வது வரிசையில் எழுதப்பட்ட கலைகளை ஐந்தினல் பெருக்கவேண்டுமாதலால் அவ்விதம் ஐந்தினல் பெருக்கப்பட்ட கலைகளில் वेलाम्=ஜாதகன் ஜனித்த நாழிகையையும் अथ=மேலும் विलग्नंच= ஜன்ம லக்கினத்தையும் होराम्=சூரிய சந்திர ஹோரைகளையும் अंशकम्=நவாம்சத்தையும் नष्टजातकसिद्धये= நஷ்ட ஜாதகம் ஏற்படுவதற்காக विजानीयात्=அறியவேண்டும்.

(தா - ம்) முன்னர் நான்காவது வரிசையில் தனியாய் எழுதப்பட்ட கலைகளை 5 ஞல் பெருக்கி 9ஐக் கூட்டிக்கொள்ளுதல் முதலியவற்றைச் செய்துகொண்டு பின்னர் நாழிகை முதலியவற்றை யறிவதற்காக அடியில் கண்ட முறையை யனுஸரிக்கவேண்டும். அதாவது: பகலில்பிறந்தவஞக ஏற்பட்டால் பகலுக்குள்ள மொத்த நாழிகையாலும், இரவில் பிறந்தானென்றேற்பட்டால் ராத்திரியின் மொத்தநாழிகையாலும் மேற்கூறியகலைகளை வகுக்கவேண்டும். இவ்விதம்வகுத்து ஈவுபோக மீதமாகவரும் எண்ணுக்கொப்பான நாழிகை எதுவோ அதில் ஜாதகன் பிறந்தான் என்றும், மேற்கூறியகலைகளை 12ஞல் வகுத்து ஈவுபோக மீதமாகவரும் எண் எவ்வளவோ, மேஷம் முதல் அவ்வெண்ணுள்ள ராசியில் ஜாதகன் ஜனித்தானென்றும், மேற் கூறிய கலைகளை 2ஞல் வகுத்து 1மீதம்வந்தால் முதல்ஹோரையில் ஜனித்தானென்றும், மீதமில்லாவிடில் இரண்டாவதுஹோரையில்ஜனித்தான் என்றும் மேற் கூறிய கலைகளை 9 ஞல் வகுத்து மீதமாக வரும் எண் எவ்வளவோ, அவ்வளவு எண்ணுள்ள நவாம்சத்தில் ஜாதகன் ஜனித்தான் என்றும் கண்டுகொள்ளவேண்டும். இம்முறையும் நஷ்ட ஜாதகம் கண்டுபிடிப்பதற்கு ஏற்பட்டதோர் முறையாகும் (எ-று)

(அ - கை) ஜாதகனுடைய ஜன்ம நக்ஷத்திரத்தை யறிவதற்கு வேறுவிதமான உபாயத்தை "ஆர்யா" என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறுர்.

मू०॥ संस्कारनाममात्रा द्विगुणा छायाङ्गुलैस्समायुक्ताः ।
शेषं त्रिनवकभक्ता नक्षत्रं तद्धनिष्ठादि ॥ १५ ॥

(ப-ரை) **संस्कारनाममात्राः**—வைதிகமான நாமகரணம் என்ற ஸம்ஸ்காரத்தையொட்டி ஏற்படுத்திய பெயரிலுள்ள மாத்திரைகளை **द्विगुणाः**= இரண்டினுல் பெருக்கினவைகளாக (**कृत्वा**= செய்து) **छायाङ्गुलैः**= பிரச்னகாலத்திலுள்ள சரீர நிழலின் அங்குலங்களுடன் **समायुक्ताः**= சேர்ந்தவைகளாகவும் செய்து **त्रिनवकभक्ताः** = 27 ஞல் வகுக்கப்பட்டவைகளாகவும் செய்து **शेषम्**= மீதமாகவருவது **यत्**= யாதுண்டோ **तत्**= அதுவே **धनिष्ठादि**= அவிட்டம் முதல் எண்ணி வருகின்ற **नक्षत्रम्** = பிரச்னம் செய்பவரின் நக்ஷத்திரமாக வாகின்றது.

(தா - ம்) வைதிக நாமகரண ஸம்ஸ்காரத்தை யொட்டி யமைக்கப்படும் பெயரிலுள்ள அக்ஷரங்களில் அமைந்துள்ள மாத்திரைகளை ஹல் எழுத்துக்கு (மெய்யெழுத்துக்கு) ½ மாத்திரையாகவும், அச்செழுத்துக்கு (உயிரெழுத்துக்கு) ஒரு மாத்திரையாகவும் எண்ணிக் கண்டுகொள்ளவேண்டும். இவ்விதம் எண்ணி வந்த மாத்திரைகளை 2ஞல் பெருக்கி, அக்காலமுள்ள சரீர நிழலை யும் அளந்து அங்குலமிவ்வளவு என அறிந்து அவ்வங்குலத்தை யும் சேர்த்து மொத்தமான தொகையை 27 ஞல் வகுத்து ஈவு போக மீதமாயுள்ள தொகை எவ்வளவோ, அவ்வெண்ணுள்ள அவிட்டம் முதல் எண்ணிவரும் நக்ஷத்திரத்தில் ஜாதகன் பிறந்த தாயறியவேண்டும் (எ - று.)

குறிப்பு:—**छायाङ्गुलैः** என்றதற்கு சிலர் வேறுவிதமாகவும் பொருள்கூறுகின்றனர். அதாவது: 16 அங்குலமளவுள்ள ஓர் துரும்பை எடுத்து, பூமியில்போட்டு, எவ்விதம் மடித்து உயரத்தூக்கினுல் அதன்நிழல்கீழ் போடப்பட்டிருக்கும் துரும்பின்முடிவு பாகத்திற்கு நேராக வருமோ அவ்விதம் மடித்துத் தூக்கவேண்டும். இவ்விதம் செய்த பிறகு காலையாஞல் உயரத் தூக்கிய பாகம் எவ்வளவோ அவ்வளவு சென்ற நாழிகை என்றும், மாலையாஞல் (15 நாழிகைக்கு மேலாஞல்) கீழ் நின்ற பாகம் எவ்வளவோ அவ்வளவு 15நாழிகைக்குமேல் சென்றநாழிகை என்றும் கொள்

ளப்படும். ஆகவே காலை மாலைகளிற் சென்ற நாழிகைகளைக் காட்டும் துரும்பின் அங்குலத்தின் எண்ணையும் மாத்திரையின் சங்கியையுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதாம்.

(அ-கை) ஜாதகனுடைய ஜன்மநக்ஷத்திரத்தை யறிவதற்கு வேறு உபாயத்தை 'ஆர்யா' என்ற விருத்தத்தாலுபதேசிக்கிறார்.

மூ०॥ द्वि-त्रि-चतुर्दश-दश-तिथि-सप्तत्रिगुणा नवाष्ट चैन्द्याद्याः ।
पंचदशघ्नास्तद्दिङ्मुखान्विता भं धनिष्ठादि ॥ १६ ॥

(ப-ரை) **ऐन्द्र्याद्याः**=கிழக்கு முதலிய 8 திக்குகளும் முறையே **द्वि-त्रि-चतुर्दश-दश-तिथि-सप्तत्रिगुणाः** 2, 3, 14, 10, 15, 21, இந்த எண்களை யுடையவைகளாகவும் **नव, अष्ट**=9, 8 இந்த எண்ணுள்ளவைகளாகவும், **पंचदशघ्नाः**=15 னல் பெருக்கப்பட்டவைகளாகவும் **तद्दिङ्मुखान्विताः-तद्दिङ्मुख**=பிரச்னம் செய்பவன் பார்த்துநின்ற திக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றவர்களின் எண்ணுடன் **अन्विताः** = சேர்க்கப்பட்டவைகளாகவும் **त्रिनवकभक्ताः**= 27 னல் வகுக்கப்பட்டவைகளாகவும் **कृताश्चेत्** = செய்யப்படுமேயாளுல் **शेषम्**=மீதமானது **धनिष्ठादि**=அவிட்டம் முதலான **भम्**= நக்ஷத்திரமாக (**भवेत्**=ஆகும்)

(தா-ம்) பிரச்னம் செய்கின்றவன் கிழக்குமுகமாக நின்று பிரச்னம் செய்வாளுயின் 2 என்ற எண்ணையும், தென் கிழக்கு முகமாக நின்றுல் 3 என்ற எண்ணையும், தெற்கு முகமாக நின்று கேட்டால் 14 என்ற எண்ணையும், தென்மேற்கு முகமாக நின்று கேட்டால் 10 என்ற எண்ணையும், மேற்கு முகமாக நின்றுகேட்டால் 15 என்ற எண்ணையும், வடமேற்கு முகமாக நின்று கேட்டால் 21 என்ற எண்ணையும், வடக்கு முகமாக நின்றுகேட்டால் 9 என்ற எண்ணையும் வடகிழக்கு முகமாக நின்று கேட்டால் 8 என்ற எண்ணையும் எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் பிரச்னம் செய்கின்றவன் பிரச்னம் செய்யும்பொழுது பார்த்துக் கொண்டிருக்கும் திக்குக்குத் தக்கபடி எண்களை கிரஹித்துக் கொண்டு பிறகு அவ்வெண்களை 15 னல் பெருக்கி அத்தொகையுடன் பிரச்னம் செய்கின்றவன் எந்த திக்கைப் பார்த்துக்கொண்

டிருக்கின்றனே, அந்தத் திக்கைப் பார்த்துக்கொண்டிருக்கும் சமீபத்திலிருக்கின்றவர்களின் எண்ணையும் சேர்த்துக்கொண்டு அம்மொத்தத் தொகையை 27 ஆல் வகுத்து ஈவுபோக மீதம் வரும் எண் எவ்வளவோ அவ்வெண் அவிட்டம் முதல் எண்ணி வந்தால் எந்த நக்ஷத்திரத்தில் முடிவு பெறுகிறதோ அதுவே ஜாதகனுடைய ஜன்ம நக்ஷத்திரமாகும் (எ - று.)

(அ - கை) நஷ்ட ஜாதக மறியும் முறையின் முடிவை "ஆர்யா" என்ற விருத்தத்தா லுபதேசிக்கிறார்.

மூ॥ इति नष्टजातकमिदं बहुप्रकारं मया विनिर्दिष्टम् ।
ग्राह्यमतस्सच्छिष्यैः परीक्ष्य यत्नाद्यथाभवति ॥ १७ ॥

(ப - ரை) **इति**=இவ்விதம் **इदम्**=இந்த **नष्टजातकम्** = நஷ்ட ஜாதகமானது **मया**=என்னுல் **बहुप्रकारम्**=அநேகம் பிரகாரமுள்ளதாக **विनिर्दिष्टम्**=உபதேசிக்கப்பட்டது. **अतः** = இம்முறையைக் கொண்டு **यथा**=எவ்விதம் **नष्टजातकम्**=நஷ்ட ஜாதகமானது **भवति**= சரியாக வருமோ **तथा**=அவ்விதம் **सच्छिष्यैः** = கூர்மையான புத்தியுள்ள சிடர்களால் **यत्नात्**=முயற்சியுடன் **परीक्ष्य** = பரிசோதித்து **ग्राह्यम्**=கிரஹித்துக்கொள்ளவேண்டும்.

(தா - ம்) நஷ்ட ஜாதகம் எடுக்கும் முறையை பராசரர், வஸிஷ்டர், யவனர், சத்தியாசாரியர், மணித்தர் முதலியோரின் மதத்திற் கிணங்க உபதேசித்திருப்பதால் கூர்மையான புத்தியுள்ள சிடர்கள் இதைக்கொண்டு நன்கு பரிசீலனை செய்து நஷ்ட ஜாதகத்தைச் சரியானபடி கண்டறிய வேண்டும். அதாவது: அடிமுதல் 16 சுலோகங்களாற் சொல்லிய ஒவ்வொரு வழியையும் நன்றாய் ஆராய்ந்து எல்லாவழியிலும் எந்தவழி ஒத்துவருமோ அதையே எடுத்துக்கொள்ளவேண்டும். அவ்விதமல்லாது இரண்டொரு சுலோகத்திற் சொல்லிய வழியைமட்டும் ஆச்ரயித்துச் சொன்னுல் அது ஒருசமயம் தவிறவும்கூடும் என்பதாம். (எ-று)

இருபத்தாருவது நஷ்டஜாதகாத்தியாயம் முற்றிற்று.

நமது சொந்தப் பிரசுரங்கள்

அடியிற்கண்ட புஸ்தகங்கள் யாவும் தேவநாகரலிபியில் மூலத்துடனும், தமிழில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளுடனும் கூடியன. ஒவ்வொரு விஷயமும் ஆக்ஷேப சமாதானங்களடங்கிய விரிவான உபன்யாஸங்கள் வாயிலாக ஆங்காங்கு விளக்கப்பட்டிருக்கின்றது. நம்பிக்கையை விருத்திசெய்யக்கூடியன.

1. ருக் யஜுஸ் ஸாமவேதிகளின் சந்தியா வந்தனம்:—இதன் முகவுரையில் சந்தியா வந்தன விஷயமாய்ச் செய்யப்படும் ஆக்ஷேபங்களும் அதற்குத்தக்க சமாதானங்களும், சந்தியா வந்தனத்தின் பலன்களும் அடங்கியிருக்கின்றன. (தேவநாகரலிபியில் மூலமும், தமிழுரையும்) 1—4

2. நஷ்ட ஜாதகம் — தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழில் விரிவான பதவுரை கருத்துரைகளுடனும் கூடியது. வராஹமிஹிரரால் செய்யப்பட்ட நஷ்ட ஜாதகாத்யாயத்தை யனுஸரித்தது. இதனால் ஜாதகமில்லாதவனும் தனது ஜாதகத்தை கணித்துக்கொண்டு விடலாம். விலை அணா 4.

3. ஸ்ரீகோபிகாகீதம்:—ராஸக்ரீடாகாலத்தில் பகவானைக் காணாது அவரை நேரில் வரவழைப்பதற்காக ஸ்ரீகோபிகைகள் உள்ளம் உருகிப் பாடிய சுலோக ரூபமான பாடல்கள். ராஸக்ரீடையைப்பற்றி செய்ப்படும் ஆக்ஷேபங்களுக்கு தக்க சமாதானம் கூறப்பட்டிருக்கிறது. (தேவ நாகரலிபியில் மூலமும், தமிழுரையும்) 0—12—0

4. ஸ்ரீருத்திரம்:—(கிரந்தலிபியில் மூலமுள்ளது.) இதன் முகவுரையில்—ஸ்ரீருத்திரத்தின் மாஹாத்மியமும், பரமேசுவரரின் மேன்மை, ஸௌலப்யம் முதலிய குணங்களும் நன்றாய் விளக்கப்பட்டிருக்கின்றன. (தமிழுரையுடன்) கிளேஸ் 1—8—0. ரப் 1—0—0

5. சாங்கியதத்துவ கௌமுதீ:-சாங்கிய சித்தாந்தத்தை சுலப தமிழ் நடையில் வெளியிடும் நூல் விலை ரப் ரூ. 2. கிளேஸ் 3—8—0

6. நவக்கிரஹாராதனக்கிரமம்—இதில் நவக்கிரஹங்களை யாராதிப்பதேன்? என்ற விஷயமாய்ப் பலவாக்ஷேப சமாதானங்களடங்கியவிரிவான உபன்யாசமும், எந்தெந்தக் காலங்களில் ஆராதிக்க வேண்டும் என்பதும், நவக்கிரஹ பிரதிமை, நவக்கிரஹ ஹோம குண்டம் முதலியவற்றைத் தயாரிக்கவேண்டிய முறையும், தமிழில் வரையப்பட்டிருக்கின்றன. ஆராதனத்திற்குவேண்டிய மந்திரங்கள் நாகரலிபியில் தமிழுரையுடனடங்கி இருக்கின்றன. அத்துடன் நவக்கிரஹ மந்திரம் நவக்கிரஹ ஸ்தோத்திரம் நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம். நவக்கிரஹ மங்களாஷ்டகம், விஷ்ணு கவசம், ஆதித்ய ஹிருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு தனியேபிழையின்றி தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை கிளேஸ் ரூ. 1—4—0 ரப் 1—0—0.

பிருஹத் ஜாதகம்

தமிழ் மொழிபெயர்ப்பு

7. இதையே ஹோரை என்றும், வராஹ ஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப் பல வியாக்யானங்களுக் கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக் கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட் டிருக்கிறோம். யாவராலும் மிக்க கடினம் எனக் கருதப்படும் ஆயுர்த்தாயம், தசாந்தர்த்தசை, நஷ்ட ஜாதகம் முதலிய பாகங்கள் யாவருக்கும் புரியக்கூடிய நிலையில் மிக்க விரிவாக எழுதப்பட் டிருக்கின்றன. உதாஹரணமாய் பல அனுபவ ஜாதகங்களும், கட்டங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட் டிருக்கின்றன. கர்க்கர், பராசரர், சத்தியாசாரியர், யவனேசுவரர் முதலியோரின் கிரந்தங்களினின்றும், ஸாரர்வளியினின்றும் அந்தந்த விடத்திற்குத் தேவையான வசனங்களை எடுத்து எழுதி தமிழில் உரையுமெழுதப்பட் டிருக்கிறது. இதன் முகவுரையில் சோதிட சாஸ்திரம் நம்பத்தக்கதல்ல என்றது முதலிய வாதங்களுக்குத் தக்க சமாதானமும், வராஹமிஹிரரின் கால நிர்ணயமும் செய்யப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்கால நிலையை யறிந்துகொள்வது அவச்யமாதலால் சோதிடத்தை யப்யசிக்க விருப்பமுள்ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப் புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டு பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ். ரூ. 8 ரப் ரூ. 7

8. சிராத்தம்—விரிவான ஓர் தமிழ் உபன்யாஸம் மட்டும். இதில் தத்காலம் சிராத்தத்தைப் பற்றி செய்யப்படும் எல்லாவிதமான ஆசங்கைகளுக்கும் லோகானுபவத்தை யொட்டித் தக்க சமாதானங்கள் கூறப்பட் டிருக்கின்றன. விலை அணா 3.

9. யாஜுஷ சூர்ய நமஸ்காரம்:—இதில் சூரிய நமஸ்கார மந்திரங்கள் நவக்கிரஹ மந்திரங்கள், ஆதித்ய ஹிருதயம் இவை யடங்கியிருக்கின்றன. (தேவநாகரலிபியில் மூலமும், தமிழுரையும்) விலை அணா 0—4

10. தைத்திரீயாரண்யகம் முதல் பிரச்னம்:—இதுவே அருணம் என்றும், சூர்ய நமஸ்காரப் பிரச்னம் என்றும் வழங்கப்படும். இதன் ஆரம்பம் भद्रंकर्णेभिः शृणुयामदेवाः என்பது. (தேவநாகரலிபியில் மூலமும், தமிழுரையும்) கிளேஸ் ரூ. 3—0 ரப் 2—0

11. புருஷசூக்தம் முதலியன:—இதில் புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், துர்க்காசூக்தம், கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீஸ்தோத்திரம் இவைகள் அடங்கியிருக்கின்றன. ஸ்ரீசூக்த முகவுரையில் ஸ்ரீசூக்த ஹோமவிதி, ஸ்ரீ மந்திரம் முதலியவைகளும், புருஷசூக்த முகவுரையில்—புருஷசூக்த ஹோமவிதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. (தேவநாகரலிபியில் மூலமும், தமிழுரையும்) 1—8—0

எல்லா புஸ்தகங்களுக்கும் V. P. சார்ஜு பிரத்தியேகம்

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

72, பெரிய தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.